மோசனம்

ஒரு மாதப் பத்திரிகை

ஆசிரியர்:
சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரி

பகுதி
10

பிரமோதூத-ஹு

வைகாசி

புதுப்பாளையம்
காந்தி ஆசிரமம்,
திருச்செங்கோடு.

வருஷ சந்தா தபாற்கூலி உள்பட ரூபாய் ஒன்று.
தனிப்பிரதி அணா ஒன்று, தபாற்கூலி வேறு.

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்

விமோசனம்

தொகுதி 1 | பிரமோதூத வஷ வைகாசி மீ | பகுதி 10

சிரித்த முகத்துடன் சிறை புகுந்த மகாத்மா

சிறைப்படுந் தறுவாயில் மகாத்மா காந்தி தேசமக்களுக்கு விடுத்த செய்தியில் " கள்ளரக்கனை ஒழியுங்கள் " என்று உத்திர விட்டிருக்கிறார்.

நமது ஆசிரியர்

நமது ஆசிரியர் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தற்போது சென்னை நகரிலுள்ள சர்க்கார் சிறைக் கூடத்தில் வாசம் செய்து வருவது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இதற்குக் காரணமாயிருந்த சம்பவங்களை இங்கே சுருக்கமாய் எடுத்துக் கூற விரும்புகிறோம்.

லாகூரில் நடந்த காங்கிரஸ் மகாசபையானது "பூரண சுயராஜ்யமே இந்திய மகாஜனங்களின் இலட்சியம்" என்று தீர்மானித்து, அந்த இலட்சியத்தை யடைவதற்காக சாத்வீக சட்டமறுப்புப் போர் நடத்தவும் அநுமதி கொடுத்தது. இத் தீர்மானத்துக் கிணங்க சத்தியாக்கிரஹதத்துவத்தில் நம்பிக்கையுள்ள தலைவர்களே காங்கிரஸ் தலைமை கமிட்டி அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களில் நமது ஆசிரியரும் ஒருவர்.

பின்னர், ஆமதாபாத்தில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார், மகாத்மா காந்திக்குப் பூரண அதிகாரம் கொடுத்து சட்டமறுப்புப் போரை நடத்தும்படி கேட்டுக்கொண்டார்கள் இதற்கிணங்க மகாத்மா காந்தி இராஜப்பிரதிநிதிக்கு பகிரங்கக் கடிதம் விடுத்து, தக்க பதில் கிடைக்காமல் போகவே, சத்தியாக்கிரஹப் போர் தொடங்கினார். முதன் முதலாக, உப்பு வரிச்சட்டத்தை எதிர்த்து இப்போர் துவக்கப் பெற்றது. மகாத்மாவைப் பின்பற்றி தேசமெங்கும் லட்சக்கணக்கான ஜனங்கள் உப்புச் சட்டத்தை மீறி வருவதும், அவர்களில் சாதாரண ஜனங்களையும் தொண்டர்களையும் தடியடி முதலிய கொடுமைகளுக் குட்படுத்தி, தலைவர்களாகப் பார்த்து அரசாங்கத்தார் சிறைப்படுத்தி வருவதும், மகாத்மா காந்தி, சேத் ஜம்னாலால் பஜாஜ், பண்டித ஜவஹரிலால் நேரு, ஸ்ரீ சென்குப்தா முதலிய தேசத்தலைவர்கள் பலர் இவ்வாறு சிறைப்பட்டிருப்பதும் அனைவரும் அறிந்த விஷயங்களாகும்.

மகாத்மா சத்தியாக்கிரஹப் போர் தொடங்கிய போது, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி வேலூரில் கூடி, தமிழ்நாட்டில் அப்போரை நடத்தும்படி நமது ஆசிரியரைக் கேட்டுக் கொண்டு பூரண அதிகாரமும் அளித்தார்கள். திருச்சியில் கூடிய அடுத்த கூட்டத்தில் ஸ்ரீ ஆச்சாரியார் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தமிழ்வருஷப் பிறப்பன்று (ஏப்ரல் மீ 13உ) ஸ்ரீ ஆச்சாரியாரின் தலைமையில் சத்தியாக் கிரஹத் தொண்டர்கள் நூறு பேர் திருச்சினுப் பள்ளியிலிருந்து வேதாரண்யத்துக்குக் கால் நடையாகக் கிளம்பினார்கள். இவர்கள் சட்டவிரோதமான கூட்டத்தாராகையால் போகும் வழியில் இவர்களுக்கு உணவும், தங்க இடமும் கொடுக்கக் கூடாதென்றும், வேறு உதவி எதுவும் செய்யக் கூடாதென்றும் தஞ்சை ஜில்லா கலெக்டர் உத்திரவிட்டார். இந்த உத்திரவு பெருந்தோல்வி யடைந்த தென்றே சொல்ல வேண்டும். தொண்டர் படை சென்ற வழியிலிருந்த எல்லா ஊர்களிலும் பெருந்திரளான ஜனங்கள் அவர்களை வரவேற்று உபசரித்து அனுப்பினார்கள்.

தொண்டர் படையின் பிரயாணத்தின் போது ஆங்காங்கு நடந்த மது விலக்குப் பிரசாரத்தைப் பற்றிய விவரம் மற்றோரிடத்தில் காணலாம். தொண்டர்கள் தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி முதலிய இடங்களின் வழியாகச் சென்று ஏப்ரல் மீ 28உ வேதாரண்யம் சேர்ந்தார்கள். 29உ உபவாச விரத மிருந்து கடவுளைத் தொழுதார்கள். 30உ அதிகாலையில் ஆச்சாரியார் தம்முடன் மற்றும் 16 தொண்டர்களை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குப் போய் அங்கே கிடந்த உப்பை எடுத்தார். மற்றத் தொண்டர்களும் அவ்வாறே சட்டத்தை மீறி உப்பு எடுத்தார்கள். இப்படிச் செய்யப்போகும் விவரம் முதல் நாள் இரவே அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்த படியால், ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்டண்ட் ஸ்ரீ கோவிந்தன் நாயர் சுமார் 50 போலீஸ்காரர்களுடன் அங்கு வந்து சேர்ந்தார். ஆச்சாரியார் எடுத்த உப்பைக் கொடுத்து விடும்படி அவர் கேட்டார். ஆச்சாரியார் இவ்வாறு செய்ய மறுத்ததுடன், தொண்டர்கள் சட்டவிரோதமான கூட்டமாகிறபடியால், உடனே கலைந்து போகவேண்டுமென்று சொன்னதையும் மறுத்துவிட்டார். இதன் மேல், போலீஸ் தலைவர் அவரைக் கைதிசெய்து மன்னார்குடி சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான் பொன்னுசாமிப் பிள்ளை முன்பு கொண்டு போனார்.

சட்டத்தைமீறி உப்பெடுத்ததற்காக உப்புச் சட்டம் 74-வது பிரிவின் கீழும், சட்டவிரோதமான கூட்டத்திற்குத் தலைமை வகித்ததற்காக இண்டியன் பினல் கோட் 145-வது பிரிவின் கீழும் நமது ஆசிரியர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இவ்விரு குற்றங்களையும் செய்ததாக ஆச்சாரியார் ஒப்புக் கொண்டார். இதற்கு சமாதானம் ஏதேனும் சொல்லப் போகிறீர்களா என்று மாஜிஸ்ட்ரேட் கேட்டதற்கு "அவசியமான எல்லாம் என்னுடைய தலைவர் மகாத்மா காந்தி சொல்லிவிட்டார்" என்று பதில் கூறினார். முதல் குற்றத்திற்காக 200 ரூபாய் அபராதம் அல்

ல்து மூன்றுமாதம் வெறுங் காவலும், இரண்டாவது குற்றத்துக்காக ஆறுமாதம் வெறுங் காவலும், ஆக ஒன்பது மாத சிறைவாச தண்டனை விதிப்பதாக மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பளித்து, ஆச்ாரியாரை 'ஏ' வகுப்புக் கைதியாக நடத்தவேண்டு மென்றும் சிபார்சு செய்தார்.

வழக்கு, விசாரணை, தீர்ப்பு எல்லாம் காலை ஒன்பது மணிக்குள் முடிந்து போகவே மத்தியான வண்டியில் நமது ஆசிரியர் திருச்சிறுப் பள்ளி சிறைக்கூடத்துக்குக் கொண்டு போகப்பட்டார். ஆச்சாரியார் சிறை வாசத்தை முன்னிட்டுத் தமிழ் நாட்டின் பல விடங்களிலும் வேலை நிறுத்தமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

ஸ்ரீ ஆச்சாரியார் சிறை சென்றதைக் குறித்து யாரும் வருந்தவேண்டிய தில்லை. இந்நாளில் உண்மையான தேசபக்தர்கள் இருக்கவேண்டிய இடம் சிறைக்கூடமே யாகும். நமது ஆசிரியருக்கு இந்தப்பேறு கிடைத்ததற்காக நாம் மகிழ்ச்சியடையவேண்டும். மேலும், சுமார் பத்துவருஷ காலமாய் இடைவிடாமல் பல துறைகளிலும் தாய் நாட்டுக்காக உழைத்து வந்த நமது தலைவருக்கு சர்க்கார் தயவினால் சிறிது காலம் ஓய்வு கிடைத்திருப்பதற்காகவும் நாம் மகிழ்ச்சி யடையலாம்.

ஆனால் அவருடைய உழைப்புக்கும், தியாகத்திற்கும் நாம் நம்மைப் பாத்திரர்களாகச் செய்து கொள்ளுதல் அவசியமாகும். ஸ்ரீ ஆச்சாரியாரிடம் அன்புள்ளவர்களெல்லாம் இப்போது செய்யவேண்டியது, அவர் நடத்திவந்த வேலைகளைத் தொடர்ந்து நடத்துவதைத் தவிர வேறில்லை. அவர் செய்த வேலைகளுக்குள்ளே மதுவிலக்கே அவருக்கு மிகவும் பிரியமான வேலையாகும். இதையே அவர் தமது வாழ்க்கைப் பெருந்தொண்டாகக் கருதியிருக்கிறார். தமிழ் நாட்டில் சத்தியாக்கிரஹப் போரை மதுவிலக்குத் துறையில் நடத்த வேண்டுமென்னும் விருப்பமும் அவருக்கிருந்தது. ஆனால் தேசமெங்கும் போர் ஒருமுகமாக நடத்தல் வேண்டுமென்னும் கருத்துடனே தான் உப்புப்போர் தொடங்கப் பெற்றது.

ஒன்பது மாதங் கழித்தோ, அல்லது கடவுள் அருளால் அதற்கு முன்னமேயோ, ஆச்சாரியார் சிறையிலிருந்து வெளிவரும்போது, முதல் கேள்வி "மதுவிலக்கு வேலை எப்படியிருக்கிறது?" என்றுதான் கேட்பார். அப்போது அவருக்கு மகிழ்ச்சிதரக் கூடிய விடையளித்தல் சாத்திய மாகுமாறு நாம் பெருமுயற்சி செய்தல் வேண்டும்.

விதூஷகன் சின்னுமுதலி

[ரா. கி.]

1

சத்திரப்பட்டியைச் சுற்றிப் பதினைந்து மைல் விஸ்தீரணத்துக்கு, விதூஷகன் சின்னுமுதலியைப் பற்றி அறியாதவர் யாருமில்லை. சிறு பிள்ளைகள் முதல், கிழவர் கிழவிகள் வரையில் எல்லாருக்கும் அவனைத் தெரியும். எந்த ஊரிலே யார் நாடகம் போட்டாலும் அவனுக்கு அழைப்பு வராமலிராது. சின்னுமுதலி வருகிறான் என்றால் அன்று கூட்டம் இரண்டு மடங்குதான். அவனுடைய அகட விகட அதிசய சாமர்த்தியங்கள் அந்தத் தாலூகா முழுவதும் பிரசித்தியா யிருந்தன.

கூத்துமேடைக்குச் சின்னுமுதலி வந்து விட்டானானால் ஒரே குதூகலந் தான். சில சமயம் கோணங்கிக் குல்லா தரித்து, புலி வேஷத்தைப்போல் கோடுபோட்ட கால் சட்டையும் மேற் சட்டையும் போட்டுக்கொண்டு வருவான். அவனுடைய நடை, உடை, பாவனை ஒவ்வொன்றும் ஜனங்களுக்குச் சிரிப்பு உண்டாக்கும். அவனுடைய பொய் மீசை நிமிஷத்துக் கொருமுறை மேலுங் கீழும் போய்வரும்.

பேசுவதற்கு அவன் வாயைத் திறந்து விட்டாலோ சொல்லவேண்டிய தில்லை: நாடகக் கொட்டகை கிடுகிடாய்த்துப் போகும். சிலசமயம் வெள்ளைக் காரனைப்போல் தொப்பி போட்டுக்கொண்டு வருவான்.

"லேடீஸ் அண்டு ஜெண்டில் மென்" முதலிய ஐந்தாறு இங்கிலீஷ் வார்த்தைகள் அவனுக்குத் தெரியும். இவைகளை வைத்துக்கொண்டு அரைமணி நேரம் அவன் ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்வான். "அசல் வெள்ளைக்காரன் கெட்டான்!" என்று சொல்லி ஜனங்கள் சந்தோஷப்படுவார்கள்.

என்னதான் பேசினாலும், பாட்டுப் பாடத் தெரியாவிட்டால் 'விதூஷக பார்ட்' ரசப்படுமோ? சின்னுமுதலிக்குப் பாட்டுப் பாடவும் தெரியும். ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் முதல், சிருங்காரரஸக் கீர்த்தனைகள் வரையில் அவன் வாயில் அகப்பட்டுப் படாதபாடும் படும். 'சுயம்' பாடும் சக்தியும் அவனுக்கு உண்டு.

"இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம்பாட் டாகாதா—சும்மா
இருந்தாலிருப்பே னெழுந்தேனே யாயிற்
பெருங்கான மேகம் பிள்ளாய்."

என்று காளமேகப் புலவர் பாடினாரல்லவா? அந்தப் புலவரும் நமது சின்னுமுதலியிடம் பிச்சை வாங்கவேண்டும். அவன் வாயில் வருவதெல்லாம் பாட்டுத்தான். பிராஸங்களைச் சரமாரியாய்ப் பொழிவான். "பாட்டு" என்று தொடங்கினால், "பாட்டு, காட்டு, ஏட்டு, வாட்டு, சூட்டு, மேட்டு......" என்று அடுக்கிக் கொண்டே போவான். இவற்றின் பொருள் அவனுக்கும் தெரியாது; கேட்பவர்களுக்கும் விளங்காது. ஆயினும் எல்லாரும் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

2

சின்னுமுதலியின் பரம்பரைத் தொழில் கைத்தறி நெசவு. ஆனால் அந்தத் தொழிலை அவன் மறந்து வெகு காலமாயிற்று. அவனுக்கு மனைவியும், ஒரு பிள்ளையும், ஒரு பெண்ணும் இருந்தனர். மனைவியும், பதினைந்து வயதான பிள்ளையும் நன்றாக நெசவு செய்வார்கள். இவர்கள் சம்பாதிக்கும் பணத்தினால் தான் குடும்ப நிர்வாகம் நடந்து வந்தது. மகள் வீட்டுக் காரியங்களைப் பார்ப்பாள். சின்னுமுதலி நாடகம் நடிக்கும் இடங்களில் தனக்குக் கிடைக்கும் வெள்ளரிக்காய், தேங்காய், வாழைப் பழம், வடை, முறுக்கு முதலிய பரிசுப் பொருள்களைக் கொண்டு வருவான். அப்பொழுதெல்லாம் குழந்தைகள் அவனை ஆவலுடன் எதிர்கொண்டழைப்பார்கள். அவனுக்குப் பணங்காசும் கிடைப்பதுண்டு. ஆனால் அதுமட்டும் வீட்டுக்கு வராது. பின், எங்கே போயிற்று என்று சொல்ல வேண்டியதில்லை யல்லவா?

ஆம் ; சின்னுமுதலியின் விதூஷக சாமர்த்தியங்களுக் கெல்லாம் பெரும்பாலும் ஆதாரமாயிருந்தது கள்ளு, சாராயந்தான். ஆரம்பத்தில் கள்ளுக் குடித்து வந்தான். ஆனுல் நாளடைவில் கள்ளில் அவ்வளவு 'ஜோர்' பிறப்பதில்லை யென்றறிந்து, சாராயத்தில் புகுந்தான். கூத்து நடத்துபவர்கள், சாராயக் கடை எவ்வளவு தூரத்திலிருந்தாலும் முன்னுடியே ஆள் அனுப்பி இரண்டு புட்டி சாராயம் வாங்கிவந்து தயாராய் வைத்திருப்பார்கள். ஆனுல் வருஷம் 365 நாளுமா கூத்து நடக்கும்? கூத்தில்லாத நாட்களுக்கும் சாராயம் வேண்டுமல்லவா? எனவே, கூத்தில் கிடைக்கும் பணம் மற்ற நாட்களுக்கு உபயோகமாகும். அத்துடன், சின்னு முதலிக்குத் தறிகள் செப்பனிடத் தெரியும். சிறுவயதில் பழகியிருந்தான். இந்த வேலையில் கிடைக்கும் கூலிப் பணத்தையும் சாராயக் கடைக்கே அர்ப்பணம் செய்து வந்தான்.

அவன் மனைவி பத்மாவதிக்கு இது மிகவும் கஷ்டமாய்த்தான் இருந்தது. ஆனுல் அவள் என்ன செய்ய முடியும்? 1921-ம் வருஷத்தில் நடந்த காந்தி இயக்கத்தின்போது ஊரில் ஒருமுறை கட்டுப்பாடு செய்தார்கள். யாரும் குடிக்கக்கூடாது ; குடித்தால் பதினைந்து ரூபாய் அபராதம் என்று. ஆனுல் பஞ்சாயத்தார் முதல் ஊர் ஜனங்கள் வரையில் எல்லாரும் ஒருமுகமாகச் சேர்ந்து சின்னுமுதலி விஷயத்தில்மட்டும் விலக்குச் செய்து விட்டார்கள். அவன் குடிக்காவிட்டால் விதூஷக 'பார்ட்' போட முடியாது. அவன் விதூஷகனுய் வராவிட்டால் கூத்து எதுவும் ரசப்படாது. ஆகவே அவனைமட்டும் கட்டுப்பாட்டி லிருந்து விலக்கியிருந்தார்கள். இந்த நிலைமையில் பத்மாவதி "குடிக்கவேண்டாம்" என்று சொன்னுல் நடக்கிற காரியமா?

3

கலியாணம் ஆன புதிதில் பத்மாவதிக்குத் தன் கணவனைப் பற்றி மிகவும் பெருமையா யிருந்தது. எல்லாரும் அவனைப்பற்றிப் புகழ்ந்து பேசினார்கள். அவன் விதூஷகனாய் நடிப்பதைப் பார்க்கப் பத்து மைல் தூரத்திலிருந்தும் ஜனங்கள் வந்தார்கள். ஆனால் பத்மாவதிமட்டும் வெகு நாள்வரை அவன் கூத்தைப் பார்க்கப் போகாமலிருந்தாள். பார்க்க வேண்டுமென்னும் ஆவல் அவளுக்கு மனதிற்குள் நிரம்ப இருந்தது. ஆனால் வெட்கம் தடைசெய்தது. கடைசியாக ஒருநாள் பக்கத்து ஊரில் கூத்துப் போட்டபோது அயல் வீட்டுப் பெண்கள் வற்புறுத்தி அவளைக் கூட்டிச் சென்றார்கள். கூட்டத்தின் ஓரத்தில் உட்கார்ந்து பத்மாவதி தன் புருஷன் மேடைக்கு வருவதை ஆவலுடன் எதிர் நோக்கி யிருந்தாள்.



கோணங்கிக் குல்லாவும் விகாரமான உடைகளும் தரித்து, கூத்தாடிக்கொண்டு சின்னுமுதலி மேடைக்கு வந்ததைப் பார்த்ததும் பத்மாவதிக்குப் பகீர் என்றது. அவன் செய்த கோரணி ஒவ்வொன்றும் பத்மாவதிக்கு அளவிலாத மனவேதனையை யளித்தது. அசங்கியமாகவும், அர்த்தமில்லாமலும் அவன் பேசிய பேச்சு அவளுக்கு நாராசமா யிருந்தது. இதற்கிடையில் மேடைக்கு மோகினிப் பெண் வந்தாள். விதூஷகன் அவளிடம் சென்று சிருங்காரப் பேச்சுகள் பேசலானான். "கண்ணே பொண்ணே" என்று ஏதேதோ பிதற்றினான். பல்லைக் காட்டி இளித்தான். மோகினிப் பெண் அவன் கன்னத்தில் ஓர் இடி இடித்தாள். எல்லாரும் 'கொல்' லென்று சிரித்தார்கள். சின்னுமுதலி

யும் சிரித்தான். பத்மாவதிக்குக் கண்ணில் நீர் ததும்பிற்று. அவள் மெதுவாய் எழுந்திருந்து தன் ஊரை நோக்கி நடந்தாள். கண்ணீர் விட்டு அழுதுகொண்டே போனுள்.

இதற்குப் பிறகு, கூத்தாடப்போக வேண்டாமென்றும், குடிக்க வேண்டா மென்றும் அவள் சின்னுமுதலிக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். அவன் கேட்கவில்லை. அவன் ஒருவேளை கேட்பதா யிருந்தாலும் ஊரார் அதற்கிடங் கொடுக்கவில்லை. இவ்வாறு நாள் போய்க் கொண்டே யிருந்தது. அவனைச் சீர்திருத்தலாம் என்ற எண்ணத்தையே பத்மாவதி விட்டு விட்டாள். தன் குழந்தைகளே கதி என்றிருந்தாள். வீட்டுக்குவந்தால் அவனுக்குச் சோறு போடுவாள். மற்றப்படி அவன் எங்கே போகிறுன், என்ன செய்கிறுன் என்று கேட்பதில்லை. அவனும் எப்போதும் ஊர் ஊராய் சுற்றிக்கொண் டிருந்தான். ஊரிலிருந்தால் சாப்பாட்டு வேளைக்கு வருவான். உடனே போய் விடுவான். குடித்து விட்டுமட்டும் வீட்டுக்கு வருவதில்லை.

4

ஒருசமயம் இரண்டுமாத காலம் வரையில் வெளியூர்களில் சுற்றிவிட்டு ஒருநாள் மாலை வீட்டுக்கு வந்துசேர்ந்தான். உடம்பு சரியாயில்லை யென்றும், தலை வலிக்கிறதென்றும் கூறினுன். உடம் பெல்லாம் பற்றி எரிகிற தென்று சொன்னுன். அவன் முகம் மினு மினு வென்று பிரகாசித்தது. கண்கள் திறு திறு வென்று விழித்தன. பத்மாவதி அவனுக்குச் சோறுபோட்டு வீட்டிலேயே படுத்துக்கொள்ளச் சொன்னுள். அப்படியே படுத்துக் கொண்டான். ஆனுல் தூக்கம் வராமல் முனகிய வண்ணம் புரண்டு கொண்டேயிருந்தான். காலையில் வைத்தியனை அழைத்துக் காட்டவேண்டுமென பத்மாவதி எண்ணினுள். அவளும் குழந்தைகளும் பகலெல்லாம் வேலை செய்தவர்க ளாதலால் விரைவில் தூங்கிப் போனுர்கள்.

* * * *

பத்மாவதி ஏதோ சத்தம் கேட்டு விழித்தெழுந்தாள். அப்போது அவள் கண்ட காட்சி அவளை நடு நடுங்கச் செய்தது. அர்த்த ராத்திரி; மண்ணெண்ணெய் விளக்கு மங்கலாய் எரிந்துகொண் டிருந்தது. சின்னுமுதலி தலையில் ஒரு பழைய முறத்தைக் கவிழ்த்துக்கொண்டு கூத்தாடிக்கொண் டிருந்தான். முறம் கீழே விழா வண்ணம் அவன் உடம்பையும் கைகளையும் நெளித்துக் கொடுத்து ஆடினுன். பத்மாவதி இன்னதென்று சொல்வதற்கில்லாத பயங்கர மடைந்தாள். மெதுவாக எழுந்து அவனருகில் சென்றுள். சின்னுமுதலி ஆடுவதை நிறுத்தி அவளை

ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தான். உடனே "கண்ணே பொண்ணே" என்னும் விகாரமான கூத்தாடிப் பேச்சுகளை ஆரம்பித்தான். பத்மாவதியின் முகவாய்க் கட்டையைப் பிடித்தான்; பல்லை இளித்தான்.

பத்மாவதி தன்னை யறியாமல் பயங்கரமான கூச்சல் ஒன்று போட்டாள். இதனால் குழந்தைகள் விழித்துக் கொண்டார்கள். மறுபடியும் சின்னுமுதலி பக்கத்திலிருந்த கூடை ஒன்றைத் தலையில் எடுத்து வைத்துக்கொண்டு ஆடினான். இதைப் பார்த்ததும் குழந்தைகளும் அழத் தொடங்கினார்கள். இதற்குள் சத்தம் கேட்டு அயல் வீட்டுக்காரர்கள் வந்துவிட்டார்கள். எல்லாரும் சேர்ந்து சின்னுமுதலியைப் பிடித்து சமாதான வார்த்தைகள் சொல்லிப் படுக்க வைத்தார்கள்.

மறுநாள் காலையில் கொங்கணப்பட்டியி லிருந்து சமாசாரம் கிடைத்தது. அவ்வூரில் கூத்து நடந்துகொண் டிருந்தபோது, சின்னுமுதலியின் ஆர்ப்பாட்டம் வழக்கத்தைவிட அதிகமாயிருந்த தென்றும், அவன் திடீரென்று ஒரு கூச்சல் போட்டு, ஸ்திரீவேஷம் தரித்திருந்தவனின் மூக்கைக் கடித்துவிட்டு, நாடகம் பார்த்துக்கொண் டிருந்தவர்களின் நடுவில் புகுந்து ஓடினனென்றும், சிலர் அதுவும் ஒரு விகடம் என்று நினைத்துச் சிரித்தார்களென்றும், மற்றும் சிலர் "இன்று போதை அதிகம்" என்று பேசிக் கொண்டார்க ளென்றும், அப்படி ஓடியவன் திரும்பிவரவே யில்லை யென்றும் கொங்கணப்பட்டியி லிருந்து வந்தவன் சொன்னான்.

சின்னாமுதலியின் விதூஷக நடிப்பை இன்றும் நீங்கள் பார்க்கலாம். சத்திரப்பட்டிக்கு நீங்கள் சென்றால், அவன் தன் பிதிரார்ஜித வீட்டின் வாசல் திண்ணையில் உட்கார்ந்து அரட்டை யடித்த வண்ண மிருப்பதைக் காண்பீர்கள். கவிதைகளும், கீர்த்தனங்களும், அகட விகடங்களும், சிருங்காரப் பேச்சுகளும் அவன் சரமாரியாய்ப் பொழிந்து கொண்டிருப்பதைக் கேட்பீர்கள். ஆனால், கொங்கணப்பட்டி கூத்தில் செய்தபடி நடுவில் விழுந்தடித்து ஓடா வண்ணம், அவன் கால் ஒன்றைத் திண்ணையின் தூணுடன் சங்கிலியால் பிணைத்துக் கட்டியிருப்பதும் தெரிய வரும். உங்களைக் கண்டதும் அவன் ஒண்ணரை டிராம் சாராயம் வாங்கி

வரும்படி கெஞ்சிக் கேட்பான். "ஆகட்டும்" என்று சொன்னால் சந்தோஷமாய்ப் பேசிச் சிரிக்கப்பண்ணுவான். மாட்டேன் என்றீர்களோ திட்டுவான். அந்த ஊர்ச் சிறுவர் சிறுமிகளுக்குங்கூட இன்னும் அவன் சிரிப்பு மூட்டித்தான் வருகிறான்.. ஆனால் அவன் மனைவி பத்மாவதி அவனைக் காணும் போதெல்லாம் கண்ணீர் விடுகிறாள்; குழந்தைகளோ வெட்கித் தலை குனிகிறார்கள்.

போதையும் பைத்தியமும்

கள்ளு, சாராயம் அல்லது வேறு லாகிரிப் பொருள் அருந்தியவனைப் பார்த்து "போதையில் இருக்கிறான்" என்று சொல்கிறோமல்லவா? இந்த "போதை" என்பது என்னவென்று சிறிது ஆராய்வோம்.

கள்ளு அல்லது சாராயம் ஒருவனுடைய வயிற்றுக்குள் போனவுடன் அவற்றிலுள்ள மதுசாரமானது இரத்த ஓட்டத்தில் கலக்கின்றது. இரத்தம் மதுசாரத்தை அதிவேகமாய் மூளையை நோக்கிக் கொண்டு போகின்றது. மூளையில் ஆயிரக் கணக்கான நுண்ணிய நரம்புகள் நாலா பக்கமும் இரத்தத்தைப் பரப்பிக்கொண் டிருக்கின்றன. ஒரே மூடியாக இரத்தம் ஓடிவரும்போது இந்த நரம்புகள் எல்லாம் புடைத்துக் கொள்வதுடன், இரத்தத்தில் மதுசாரம் என்னும் விஷமும் கலந்திருக்கிற படியால் மூளை தன்வேலையை சரிவரச்செய்ய முடியாமல் குழம்பி விடுகின்றது. இந்த நிலையைத்தான் "போதை" என்று சொல்கிறோம்.

போதை கொண்டவன் நிதானித்து யோசனை செய்யும் சக்தியை இழந்துவிடுகிறான். அவனுடைய எண்ணங்கள் எல்லாம் தாறுமாறுகின்றன. ஒருவன் போதையில் இருக்கும்போது தான் மிகவும் புத்திசாலித்தனமாகப் பேசுவதாய் நினைத்து ஒன்றைச் சொல்லுவான். போதை தெளிந்தபின், அதுவே மிக்க முட்டாள் தனமான பேச்சாக அவனுக்குத் தெரியவரும்.

குடி அதிகமாக ஆக, மேலும் மேலும் அர்த்தமில்லாமலும், பொருத்த மில்லாமலும் உளறிக் கொட்டுவான். அவனுடைய நடை, உடை, பாவனைகள் பார்ப்போருக்குச் சிரிப்பை உண்டாக்கும். தன்னைப் பரிகாசம் செய்கிறார்கள் என்பதை அவன் அறிந்துகொள்ளாமல், தன்னுடைய சாமர்த்தியத்தைக் கண்டு மெச்சுகிறார்கள் என்று எண்ணி மேலும் மேலும் கோரணி செய்வான்.

இது போலவே காரணமின்றி அவனுக்குக் கோபமும்வரும்; கண்டபடி திட்டுவான்; தான் மிகவும் நேசிக்கிறவர்களை அடிப்பான்; கொலையும் செய்வான்; ஆனால் இப்படியெல்லாம் செய்கிறோமே என்ற எண்ணமே அவனுக் குண்டாகாது. போதை தெளிந்த பிறகுதான் தன்னுடைய செயல்கள் எவ்வளவு தீயவை என்பது அவனுக்குத் தெரியும்.

குடித்தவுடன் மதுசாரம் கலக்கப் பெற்ற இரத்தம் ஏராளமாய் மூளையில் பாய்கிறதென்றும், இதனால் மூளையிலுள்ள இரத்த நரம்புகள் புடைத்துக் கொள்கின்றன வென்றும் மேலே சொன்னோ மல்லவா? இவ்வாறு அடிக்கடி புடைப்பதால் அந்த நரம்புகள் மிகவும் பலவீன மடைந்திருக்கும். இந்நிலைமையில் அதிக குடியினாலோ அல்லது வேறு ஏதேனும் கிளர்ச்சியினாலோ அதிக இரத்தம் மூளைக்குப் பாய நேர்ந்தால், அந்த நரம்புகளில் ஒன்று வெடித்துவிடலாம். இதன்பயனாய் மனிதன் மூர்ச்சையடைந்து பிணம்போல் கிடப்பான்; சில சமயம் பிணமாகவே ஆவான்.

போதை கொண்டபோது மூளை யோசிக்கும் சக்தியை யிழந்து விடுகிறதென்றும், அதனால் குடிகாரன் தாறுமாறாய்ப் பேசி சிரிப்பு உண்டாக்குகிறான் என்றும் மேலே பார்த்தோ மல்லவா? அடிக்கடி அளவு மீறிக் குடித்து வருவதின்பயனாக, சிலசமயம் மூளை நிரந்தரமாகக் கெட்டுப் போய்விடும். சுத்த இரத்தமே கிடைக்காமல், மதுசார விஷங் கலந்த இரத்தமே வந்துகொண் டிருந்தால், மறுபடி சீர்ப்பட முடியாதா படி மூளை பலவீன மடைந்துவிடுகிறது. இந்த சாசுவத போதை நிலையைத்தான் பைத்தியம் என்று சொல்கிறோம்!

இங்கிலாந்தில் ஜன நடமாட்டம் இல்லாத சாலை ஒன்றில் ஒரு மோட்டார் வண்டி பழுதாகி நின்றுவிட்டது. நாலுமணி நேரங்கழித்து அந்தப் பக்கம் வந்தவர்கள் மோட்டார் வண்டிக்குள் பார்த்தபோது அங்கே இரண்டு மனிதர் இறந்து கிடப்பதைக் கண்டார்கள். பிரேதங் களைப் பரிசோதனை செய்த டாக்டர் ஜி. பி. எட்கார்டன் என்பவர், மரண விசாரணையின்போது, "மதுபான மயக்கத்திலிருக்கையில் குளிரில் அடி பட்டதால் இறந்ததாக" சாட்சி கூறினார். ஜூரிகளில் ஒருவர் "நாலு மணி நேரம் குளிரில் அடிபட்டதால் மரணம் நேர்ந்து விடுமா?" என்று சந்தேகப்பட்டுக் கேட்டார். "ஆம்; மது மயக்கத்தி லிருக்கும்போது குளிரில் அடிபட்டால் மரணம் நேரக்கூடும்" என்று டாக்டர் எட்கார்டன் பதில் அளித்து, ஒரு வைத்திய புத்தகத்திலிருந்து பின்வரும் பகுதியைப் படித்துக் காட்டினார்:—"வயது வந்த மனிதர்கள் சாதாரணமாய்க் குளிரைத் தாங்குவார்கள். ஆனால் மதுபான போதையி லிருக்கும்போது தாங்குவது கஷ்டம். ஏனென்றால், குளிரினால் உண் டாகும் பலவீனத்தை மதுசாரம் அதிகப் படுத்துகிறது."

* * * *

ஸ்ரீமதி ரத் ராபின்ஸன் என்பவர் பங்களூரில் வசிக்கும் ஓர் அமெ ரிக்கப் பெண்மணி. இவர் "டிரஷர் செஸ்ட்" என்னும் குழந்தைகளுக் குரிய அழகான பத்திரிகைக்கு ஆசிரியர்; பங்களூர் மாதர் மதுவிலக்கு சபையின் அக்கிராசனர்; மைசூர் இராஜ்ய மதுவிலக்குசங்கத்தின் உப அக்கிராசனர்; மகாத்மா காந்தியினிடம் பேரபிமானம் பூண்டவர்; கதர் அணிபவர். இவர் நமது பத்திரிகைக்கு அடிக்கடி கட்டுரைகள் எழுதிவர ஒப்புக்கொண்டு, முதலாவதாக அடுத்த பக்கமுள்ள கட்டுரையை அனுப்பி யிருக்கிறார்.

விஷம்—தொடக்கூடாது

[ஸ்ரீமதி ரத் ராபின்ஸன்]

மதுபானத்தைப் பற்றித் தவருன அபிப்பிராயங்கள் பல ஜனங்களிடையே இருந்து வருகின்றன. உதாரணமாக, மதுபானம் உற்சாக மூட்டும் ஒரு மருந்தென்றும், அது ஹிருதயத்திற்கு வலிவு கொடுக்கிறதென்றும் சிலர் நினைக்கிருர்கள். ஆனல் இது முற்றும் தவருன எண்ணம் என்று இவ்விஷயத்தைப் பற்றி நன்கு ஆராய்ச்சி செய்த ஸர். விக்டர் ஹார்ஸ்லி, டாக்டர் ஸ்டார்ஜ் என்னும் இரு பிரபல வைத்தியர்கள் சொல்லுகிருர்கள். இவர்கள் பரிசீலனை செய்து பார்த்ததில் மதுசாரத்தினல் உண்மையில் ஹிருதயம் பலவீனமடைகிறதென்றும், உடலுக்கு வேண்டிய அளவு ரத்தத்தைச் செலுத்தும் சக்தியை அது இழந்து விடுகிறதென்றும் தெரியவந்தன. இதன் பயனுக நாளடைவில் ரத்த சோகை உண்டாகி, தேகபலம் குறையுமென்று சொல்லவேண்டியதில்லை.

ஜலதோஷம் முதலிய நோய்களுக்கும், பலவீனம், களைப்பு முதலியவைகளுக்கும், மதுசாரம் நல்ல மருந்தென்பது மற்ருெரு தவருன எண்ணம். ஸர். ஆண்டிரூ க்ளார்க் என்பார் நன்கு ஆராய்ச்சிசெய்து, "மதுசாரம் ஒருவகை விஷம்......ஏதேனும் ஒரு வகையில் தேகாரோக்யத்தை அது நிச்சயம் கெடுக்கின்றது," என்று சொல்லுகிருர்.

அமெரிக்காவில் சில காலத்திற்கு முன்பு பாம்புகடிக்கு சாராயத்தை மருந்தாகக் கொடுத்து வந்தார்கள். அப்படி மருந்து கொடுத்தும் இறந்து போனவர்கள் அநேகர். இவர்கள் பெரும்பாலும் பாம்பு விஷத்தினல் சாகவில்லை யென்றும், சாராய விஷத்தினுலேயே இறந்தார்களென்றும் இப்பொழுது அமெரிக்க வைத்தியர்கள் சொல்கிருர்கள்.

இரண சிகிச்சை செய்யப்பட்டவர்களுக்கும், வேறு நோயிலடிபட்டவர்களுக்கும், அவர்கள் விரைவில் தேகபலம் பெறுவதற்காக முன்னெல்லாம் மதுபானம் கொடுப்பதுண்டு. இது பெரிதும் தவருன வழக்கமென்று இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. மதுசாரம் நோயாளிகள் குணமடைவதைத் தடைசெய்வதோடு சில சமயம் அவர்களுடைய மரணத்திற்கும் காரணமாவதாகத் தெரிய வந்திருக்கிறது.

மதுசாரம் ஜீரண சக்தியினை வளர்ப்பதாகச் சிலர் நினைக்கிருர்கள். இதற்கு மாருக அது ஜீரணத்தைத் தடை செய்கிறதென்று ஸர் வில்லியம் ராபர்ட்ஸ் முதலிய பிரபல வைத்தியர்கள் சோதனைகளினுல் நிரூபித்திருக்கிருர்கள். மதுசாரம் உணவைக் கெட்டிப்படுத்துவது இதற்கு ஒரு காரணம். மற்ருெரு காரணம் வயிற்றிலுள்ள தசை நார்களை மதுசாரம் பலவீனப் படுத்துவதாகும். அடிக்கடி இழுத்து நீட்டிய ரப்பரைப்போல வயிற்றிலுள்ள தசை நார்களும் நீண்டு மெலிந்து விடுவதால் ஜீரணவேலை நன்கு நடைபெறுவதில்லை.

மதுசாரம் உடம்பிலுள்ள தசை நார்களுக்கு வலுவளித்து தேக பலத்தை வளர்ப்பதாக நம்புவோர் சிலருண்டு. இதுவும் பெரிய தவருன

கொள்கை. ஆராய்ச்சியும் அனுபவமும் இக்கொள்கையை மறுப்பதாக டாக்டர் ஜான் எபல் சொல்லுகிறார்.

மதுபானம் செய்பவர்கள் தாங்கள் முன்னைவிட வேகமாகவும் திறமையாகவும் வேலை செய்வதாக எண்ணுவதுண்டு. உண்மையில் அவர்களை மற்றவர்கள் கவனித்துப் பார்த்ததில் வேலைத்திறமை மிகவும் குறைந்து போனதாகத் தெரியவந்தது. சிறிதளவு மதுசார மருந்துவதனாலும் வேலைத் திறமை குறைந்து விடுகிறது. அமெரிக்காவில் வாலிபர்களுக்கு பந்தாட்டத்தில் பயிற்சி யளிப்பவரான காணி மாக் என்பவர் சொல்வதாவது:—"பந்தாட்டக்காரனுக்குக் குடி உதவாது. பெருங் குடி அவனை உடனே கெடுப்பது போலவே மிதக்குடி அவனை நாளடைவில் கெடுத்துவிடுகிறது. மதுசாரம் ஒருவனுக்கு மந்தத் தன்மையை உண்டாக்குகின்றது, முடிவில் அவன் தோல்வியடைந்தே தீருவான்... குடிக்கும் இளைஞன் எவனையும் நான் பயிற்சி செய்விக்க ஏற்றுக்கொள்ளேன். இது என் உறுதியான கொள்கை."

மதுசாரம் உடலை பலவீனப் படுத்தி நிமோனியா, க்ஷயம், பிளவை முதலிய நோய்கள் எளிதில் பற்றுவதற்கு இடமாக்குகிறது.

மதுபானத்தினால் மூளைத்திறமை அதிகமாகும் என்றும் சிலர் எண்ணுகிறார்கள் இந்தத் தவறான நம்பிக்கையே அனேகர் மதுபானக் குழியில் விழுவதற்கு ஏதுவாயிருக்கிறது. ஆனால் மூளையின் சக்தி மதுசாரத்தினால் எவ்வாறு பாதிக்கப் படுகிறதென்பதை ஆசிரியர் கிரேப்ளின் போன்ற மனோதத்வ நிபுணர்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். சொற்ப அளவு மதுபானம் கூட மனோவன்மையைக் குறைக்கிறதென்பது அவர்களுடைய முடிவாகும். கூட்டல், படித்தல், நெட்டுருச்செய்தல் இவைகளில் மதுபானத்துக்கு முன்பும் பின்பும் பலமுறை சோதனை செய்து பார்த்து, ஆசிரியர் கிரேப்ளின் கூறும் முடிவாவது:— "மதுபானம் அருந்திய உடனேயே மனிதனுடைய மனோசக்தி நிச்சயமாய்க் குறைந்து விடுகிறது. ஆனால் குடிப்பவன் இதை உணர்வதில்லை."

டாக்டர் கட்டன் என்னும் மற்றோர் ஆராய்ச்சிக்காரர் சொல்வதாவது "மதுபானம் அருந்தியவுடன் ஒருவனுடைய சிந்தனா சக்தி அதிகரிப்பதாய்த் தோன்றும். ஆனால் அது கட்டுக்கடங்காமல் போவதால் நற்பயன் எதுவும் விளைவது கிடையாது. குடி முற்றும் போது மனோவலிமை குன்றி சிந்தனாசக்தியை மனிதன் அடியோடு இழந்து விடுகிறான்."

மதுசாரம் மனிதனுக்குச் செய்யும் நன்மைதானென்ன? அது மனிதனுடைய தேகபலம், மனோவன்மை, அவனுடைய செல்வம், ஆரோக்கியம், மனநிம்மதி ஆகிய எல்லாவற்றையும் கொள்ளை கொள்கிறது. அவனுடைய வாழ்க்கை யின்பத்தைக் குலைக்கின்றது. பெரிய வேலைகள் செய்து தேசமஹோன்னதத்திற்குத் துணைபுரியும் சக்தியைப் பறிக்கிறது. மதுசாரத்திற்கு விஷம் என்பதே சரியான பெயராகும். இதை நன்குணர்ந்து அவ்விஷத்தைக் கண்ணெடுத்தும் பாராமலிருப்போமாக.

மனிதன் மிருகமாகிறான்

ஜீவ வர்க்க பரிணாமத்தில் மனிதன் எல்லாப்பிராணிகளிலும் மேற்படியில் இருக்கிறான். உயிர்ப்பிராணிகள் ஓரறிவுள்ள புழுபூச்சிகளிலிருந்து நாளடைவில் வளர்ச்சிபெற்று, பட்சியாகி, மிருகமாகி, கடைசியில் மனிதனானதாக ஆராய்ச்சிக்காரர் சொல்லுகிறார்கள்.

மனிதனை மற்ற மிருகங்களிலிருந்து பிரிப்பவை மூன்று அம்சங்களாகும். ஜீவ வர்க்க வளர்ச்சியில் இந்த மூன்று அம்சங்களும் கடைசியாக ஏற்பட்டவை. அவைகளை மனிதனிடத்தில் தான் காணலாம்.

எதையும் பிடித்துத் தூக்குவதற்கும் எழுதுவதற்கும், வேறு காரியங்கள் செய்வதற்கும் சகாயமான கைவிரல்களின் அமைப்பு ஒன்று; பேசுவதற்கு அநுகூலமான உதடு, நா இவைகளின் அமைப்பு இரண்டாவது; பகுத்தறிவுடன் சிந்தனைசெய்து முடிவு செய்வதற்கேற்ற மூளையின் அமைப்பு மூன்றாவது.

உயிர்க் குலத்தின் வளர்ச்சியில் கடைசியாகக் கிடைத்த இந்த மூன்று அமைப்புகளையுந்தான் மதுசாரம் முதலில் தாக்குகிறதென்பது ஓர் விந்தையான விஷயமாகும்.

குடித்துப் போதை கொண்டவுடன் ஒருவனிடம் ஏற்படும் மாறுதல்களைக் கவனித்துப் பாருங்கள். அவனுடைய கைவிரல்கள் தங்கள் வேலையை சரிவரச்செய்ய மறுக்கின்றன. ஏதாவது ஒரு பொருளை அவன் எடுக்க முயலும்போது அவனுடைய விரல்கள் தடுமாறுவதையும், அப்படியே எடுத்தாலும் மறுபடியும் கீழே போட்டுவிடுவதையும் கவனியுங்கள். குடிகாரன் கையில் ஏதேனும் கண்ணாடி சாமான் கொடுத்தீர்களானால் 100 க்கு 90 பங்கு அது கீழே விழுந்து உடைவது நிச்சயம்.

அடுத்தாற்போல், பேச்சுக்குரிய அவயவங்கள் தங்கள் வேலையைச் சரிவரச்செய்ய மறுப்பதை அவனிடம் பார்க்கலாம். குடிகாரனுடைய நாவும் உதடுகளும் ஒத்துழைப்பதில்லை. பேச்சு குளறிக் குளறி வருகின்றது.

அதேசமயத்தில், அவனுடைய மூளையும் கெட்டுவிடுகின்றது. சிந்திக்கும் சக்தியை இழந்து விடுகிறபடியால் முன்னுக்குப்பின் பொருத்தமில்லாமல் உளறிக் கொட்டுகிறான். காரியங்களும் அப்படியேதான் செய்கின்றான்.

இவ்வாறு மனிதப் பிறப்புக்கே சிறப்பாக உரிய விரல் அமைப்பு, பேச்சுஅமைப்பு, மூளை அமைப்பு ஆகிய இம் மூன்றும் கெட்டுவிடவே, குடிகாரன் மிருகத்துக்கு சமமாக ஆகிறான்.

தொண்டர் யாத்திரை

[ஏ. சுப்பையா]

தமிழ் வருஷப் பிறப்பன்று (13—4—30) திருச்சியிலிருந்து ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரின் தலைமையின் கீழ்ப் புறப்பட்ட சத்தியாக்கிரகத் தொண்டர்கள் வேதாரண்யம் போகும் வழியில் அன்றுடம் தங்கின ஊர்களில் அவகாச முள்ள வளவு தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு முதலிய நிர்மாண திட்டத்தின் முக்யமான அம்சங்களைப் பிரசாரம் மூலமாகவும் காரிய ரூபமாகவும் ஜனங்கள் மனதில் பதியுமாறு செய்து வந்தார்கள். ஸ்ரீமான் ஆச்சாரியார் அவர்களுக்குப் பிராணன் போலுள்ள மதுவிலக்குப் பிரசாரம் எல்லாவற்றிலும் முதன்மையாகச் செய்யப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் போய்த் தங்கியவுடன் காந்தி ஆசிரமத்தார் வெளியிட்டிருக்கும் மதுவிலக்குப் படங்களை வரிசையாகக் கட்டித் தொங்கவிடுவது வழக்கம். படங்களைக் கட்டினவுடனே ஜனங்கள் கூடி அதிக ஆவலுடன் அவைகளை ஒன்றன் பின் ஒன்ருய்க் கவனித்துப் பார்ப்பார்கள். அவர்களுக்கு அப்படங்களை விளக்கி மதுபானத் தீமைகளைத் தொண்டர்கள் எடுத்துச் சொல்வார்கள்.

தினமும் மத்தியானம் ஒரு மணிக்கு, சில தொண்டர்கள் ஆதிதிராவிட சகோதரர்கள் இருக்குமிடம் சென்று அவர்கள் வீதிகளைப் பெருக்கி சுத்தம் செய்துவிட்டு மதுவிலக்குப் படங்களை ஒவ்வொன்ருய்த் தொங்கவிட்டு அவைகளை விளக்கிப் பேசுவார்கள்.

கிராமத்தில் எல்லோரும் இந்தப் பிரசங்கங்களைக் கேட்கவும் மதுவிலக்குப் படங்களைப் பார்க்கவும் மிக்க ஆவலுடனும் உற்சாகத்துடனும் காத்திருந்தார்கள். முக்கியமாக ஆதிதிராவிட சகோதரிகளும், குழந்தைகளும் திரள் திரளாக சித்திரைமாதத்து வெயிலையும் கவனியாது இக்கூட்டங்களுக்கு வந்தார்கள். பிரசங்கத்தின் முடிவில் அனேகமாய் எல்லா இடங்களிலும் ஒருசிலராவது "இன்று முதல் கள், சாராயம் முதலியவாகிரி வஸ்துக்களைத் தொடுவதில்லை" என்று ஆண்டவன் சாக்ஷியாக சத்தியம் செய்து கொடுத்து வந்தனர். தங்கள் தாய்மார்களின் முன்னிலையிலும், குழந்தைகளுக் கெதிரிலும் பழைய குடியர்கள் பலர் இம்மாதிரி தைரியமாய்ச் சபதம் கூறினர். பிரதிக்ஞையின் முக்கியத்தை உணராமல் அவர்கள் இப்படி சத்தியம் செய்தார்கள் என்று சொல்வதற்கில்லை. ஏழைமக்கள் சத்தியத்துக்குப் பயந்து நடப்பவர்கள் என்று நன்கு தெரிய வந்தது. நூறுபேர் இருக்கும் இடங்களில் குடிகாரர்கள் எவ்வளவு

பேர் என்றால் அனேகமாய் நூறுபேருமே கையைத் தூக்குவார்கள். ஆனால் குடியை விட்டுவிட எத்தனைபேர் தயார் என்றால் முப்பது பேர்களே சத்தியம் செய்வார்கள். இம்மாதிரி உறுதிகொடுத்தவர்கள் திரும்பவும் கள் சாராயத்தைத் தொடமாட்டார்கள் என்று நிச்சயமாய்ச் சொல்லக் கூடும். சத்தியம் எடுத்துக் கொண்டவர்களை ஒவ்வொருவராகப் பல தடவைகள் கேள்விகள் கேட்டேன். அவர்கள் ஒருநாளும் திரும்ப இந்தச் " சனியன் " பக்கம் போவதில்லை யென்றே கூறினார்கள். அவர்கள் எடுத்துக் கொண்ட சத்தியத்தைக் காப்பாற்றுமாறு தாய்மார்களையும் சகோதரிகளையும் வேண்டிக் கொண்டதற்கு அவர்கள் அவ்வாறே வாக்குறுதி கொடுத்தார்கள்.

கல்லணை, திருக்காட்டுப் பள்ளி, திருவையாறு, தஞ்சாவூர், அய்யம் பேட்டை, வழுத்தூர், பாபநாசம், கும்பகோணம், செம்மங்குடி, ராஜப்பய்யன் சாவடி, மன்னார்குடி, விளாக்குடி, மருதூர், ஆயக்காரனம்பலம், முதலிய இடங்களில் மதுவிலக்குப் பிரசங்கங்கள் நடந்தன. கல்லணை தண்டாங்கோரை, ஆயக்காரனம்பலம் இந்த இடங்களில் ஆச்சாரியார் அவர்களே மதுவிலக்கைப்பற்றிப் பேசினார்கள்.

தண்டாங்கோரை என்பது ஒரு சிறிய கிராமம். ஆனால் சுமார் நூறு பஞ்சம சகோதரர்கள் சுற்று வட்ட கிராமங்களிலிருந்து வந்திருந்தார்கள். ஆச்சாரியார் இந்த ஏழைகளுடன் சுமார் $1\frac{1}{2}$ மணிநேரம் மதுபானத்தால் விளையும் தீமைகளைப் பற்றிப் பேசினார். கடைசியாகக் கூட்டத்தில் பலர் " இனிக் குடியை விட்டு விடுகிறோம் " என்று சபதம் எடுத்துக் கொண்டார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு கள்ளுக்கடைக் குத்தகைக் காரர் வந்து சேர்ந்தார்.

" ஆமாம், ஐயா, தாங்கள் சொல்வதெல்லாம் சரியே. பாட்டன் பூட்டன் தலைமுறையாக நடத்திய எங்கள் தொழிலை அடியோடு அழித்துப் போட வேண்டுமென்கிறீர்களே, இது நியாயமா ?" என்று கேட்டார்.

" ஆமாம், ஆமாம், இப்பொழுதுதான் சாமி படத்தில் காட்டினீங்களே. எப்படி எங்கள் பணத்தை எல்லாம் நீங்கள் வாங்கிக் கொண்டு எங்களுக்குக் குடிக்கக் கஞ்சி கூட இல்லாமல் செய்கிறீர்களென்று தெரிந்து கொண்டோம். இனி அந்தப் பிசாசு எங்களிடம் வராமல் பார்த்துக் கொள்வோம் " என்று ஆதிதிராவிட நாட்டாண்மைக்காரன் கூறினான்.

இதைக் கேட்டதும் குத்தகைதாருக்குக் கோபம் அதிகரித்தது. ஆனால் ஆச்சாரியார் அதற்கு இடங் கொடாமல் தடுத்துவிட்டார்:

"நீங்கள் சொல்வது சரிதான். மரம் ஏறிப் பதனி எடுத்து சர்க்கரை வெல்லம் காய்ச்சுவது உங்களுக்குப் பரம்பரையாக ஏற்பட்ட தொழில். அந்தத் தொழிலைச் செய்ய வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. மூன்று பைசா பதனியைப் புளிக்க வைத்துக் கள்ளாகச் செய்து நான்கணவுக்குக் காலையிலிருந்து அந்திவரைக்கும் பாடுபட்டுக் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பொருளைப் பறிமுதல் செய்யாதீர்கள் என்று சொல்கிறேனே ஒழிய வேறொன்று மில்லை. ஏழைக்குடிகளை நாசமாக்கும் கள், சாராயம் முதலியவைகளை விற்றுப் பணம் சம்பாதிப்பதைத்தான் வேண்டா மென்று சொல்கிறேன்" என்றார்.

குத்தகைதாரர் பேசாமல் போய் விட்டார்.

செம்மங்குடி 40 குடும்பங்கள் வசிக்கும் ஒரு சிறிய கிராமம். தஞ்சை ஜில்லா கலெக்டரின் உத்திரவுக்குப் பயந்து ஆலங்குடி கிராமப் பணக்காரர்கள் தமிழ்நாட்டுத் தொண்டர் படையை வரவேற்கத் தயங்கிய காரணத்தால் செம்மங்குடி கிராமத்தார் தொண்டர்களை வரவேற்க ஏற்பாடு செய்திருந்தனர். இந்த ஊரில் ஆதிதிராவிட சகோதரர்கள், தொண்டர்கள் வருகை யன்று கலந்துகொள்ள வேண்டித் தங்கள் தங்கள் சுற்றத்தார்களுக்கெல்லாம் அழைப்புக் கடிதம் எழுதியிருந்தார்கள். சுமார் 1000 ஆதிதிராவிட சகோதரர்கள் தத் தம் மனைவி மக்களுடன் வந்திருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் செம்மங்குடி கிராமவாசிகள் உணவளிக்க ஏற்பாடு செய்திருந்தனர். அன்றுபகல் 2 மணிக்கு இடை இடையே தகுந்த மதுவிலக்குப் பாட்டுகளுடன் படங்கள் காண்பிக்கப் பட்டன. அவர்கள் அனைவரும் தத்தம் ஊர் சென்று ஜாதிக் கட்டுப்பாடு செய்து கள்ளரக்கனை அடியோடு தங்கள் சமூகத்தினின்றும் ஒழித்து விடுவதாக வாக்குத்தத்தம் செய்தார்கள்.

மன்னார்குடியில் கடைத்தெருவின் மத்தியிலும் நெசவுகாரர்கள் இருக்கும் தெருவில் வாசகசாலையிலும் மதுவிலக்குப் படங்கள் காண்பிக்கப்பட்டன. இந்த ஊரில் நெசவு செய்யும் முதலிமார்களிடம் குடிப்பழக்கம் அதிகம் கிடையாது. கொஞ்சம் இருப்பதையும் தொலைப்பதற்கு ஜாதிக்கட்டுப்பாடு செய்யும்படி வேண்டிக் கொண்டதற்கு இவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொண்டர்கள் போகும் வழியில் செய்த மதுவிலக்குப் பிரசாரம் ஜனங்களிடையே ஒரு தீவிர உணர்ச்சியை யுண்டு பண்ணியிருக்கிறதென்பதில் சந்தேகமேயில்லை. இந்த ஊக்கத்தைப் பயன் படுத்திக் கள்ளரக்கனைத் தொலைப்பதற்குத் தஞ்சை ஜில்லா பிரமுகர்கள் முன்வந்தால் நலமாயிருக்கும்.

ராசிபுரத்தில் மதுவிலக்கு வேலை

சேலம் ஜில்லாவில் கலால் கமிஷனர் உத்திரவினால் மூடிய கள்ளு சாராயக் கடைகள் இருபத்தேழில், பதினைந்து கடைகள் ராசிபுரம் தாலூகாவைச் சேர்ந்தவையாகும். இத் தாலூகாவில் சேலம் ஜில்லா.பாங்கியின் பொருளுதவியைக் கொண்டு திவான் பகதூர் ஆர். இராமச்சந்திர ராவ் அவர்களின் மேற்பார்வையில் கிராம நிர்மாண வேலை சிலகாலமாக நடந்து வருகிறது. கடைகள் மூடியதிலிருந்து, ஜில்லா பாங்கி இன்ஸ்பெக்டர்கள் இருவர் மது விலக்கு வேலைக்கென்றே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். காந்தி ஆசிரமத்தார் வெளியிட்டிருக்கும் மதுவிலக்குப் படங்களின் உதவி கொண்டு இவர்கள் சிறந்த தொண்டு செய்து வருகிறார்கள்.

இவ்விருவரில் ஸ்ரீமான் ஜி. என். சக்கரவர்த்தி நமக்கு எழுதியுள்ள கடிதத் திலிருந்து சில பகுதிகளை இங்கே பிரசுரிக்கிறோம் :

“ இந்த எல்லையில் கள்ளினின்று விடுதலை அடைந்துவிட்டோம் என்று சொல்லும் தைரியம் எனக்கு வந்திருக்கிறது. நமது சகோதரிகள் கிராமாந்தரங்களில் நமக்கு உதவி புரியும் எண்ணம் கொண்டுவிட்டார்கள். செவ்வாய்க்கிழமை இரவு சர்க்கார் நாட்டாமங்கலம் என்னும் கிராமத்தில் கூட்டம் நடத்தப்பட்டது. சுமார் 250 பேர் வந்திருந்தனர். அவ்வூரில் குடியில் ஈடுபட்டவர்கள் 23 பேர். இவர்களும் இவர்களின் மனைவிகளும் வந்திருந்தனர். கூட்டம் முடிந்தவுடன் குடிப்பவர்களைத் தனித்தனியே கூப்பிட்டு சத்தியம் வாங்கப்பட்டது. 9 பேர்தான் முதலில் அதற்கிணங்கினார்கள். பின்பு 11 பேர் அவர்களின் மனைவிமார்களின் தூண்டுதல் அல்லது வேண்டுகோளுக்கு இணங்கி சபைமுன் சத்தியம் செய்தனர். ஸ்திரீகள் தான் இதில் மிகவும் ஊக்கம் செலுத்தினர். மறுநாட்காலை நான் அவ்வூரிலே தங்கி குடிப்பவர்களின் வீடுகளுக்குச்சென்று அவர்களில் 19 பேரைச் சந்தித்தேன். இவர்களது மனைவிமார்கள் இவர்களுக்கு மிகவும் அழகாக என்முன் புத்தி புகட்டினார்கள். இவன் குடியன் என்று அறிந்திருந்தால் நான் கண்ணாலம் பண்ணியிருக்க மாட்டேன் என்று ஒருஸ்திரீ கூறியது எல்லோருக்கும் நகைப்பை உண்டாக்கியது. அவன் புருஷனும் இதற்குப் பதில் கூறவில்லை.

15—4—30ல் எனது 'ஒற்றர்' கள் என்னிடம் வந்து முருங் கப்பட்டி என்னுமிடத்தில் திருட்டுக் கள் விற்பனை நடத்தும் விஷ யம் அறிவித்தனர். நான் அவர்களில் ஒருவனை அவ்விடத் திலேயே இருக்கும்படி அனுப்பி மத்தியானம் மணி ஒன்றுக்கு அங்கே சென்றேன். குடிப்பவர்களையும், விற்பவனையும், கள் மொடாக்களையும் கைப்பிடியாய்ப் பிடித்தேன். அவர்களெல் லோரையும் பானைகளுடன் ராசீபுரம் அழைத்துவரவே ஸ்ரீ ராமச்சந்திர ராவ் அவர்கள் விஜயம் செய்திருந்த விஷயமறிந்து அவர்களிடம் நேரில் ஒப்புவித்தேன். அன்னார் மனமிரங்கி விற்ப வனிடம் அருகேயிருந்த மாரியம்மன் கோவிலில் சத்தியம் வாங்கிப் பானைகளைக் கள்ளோடு உடைத்துப்போட்டு அவனை மன்னித் தனுப்பினார்கள். இதேசமயத்தில் நாமக்கல் ஆப்காரி சர்க்கிள் இன்ஸ் பெக்டர் எனக்கு எழுதியிருந்த கடிதம் ஸ்ரீ இராமச்சந்திர ராவிட மிருந்தது. அதில் திருட்டுத் தனமாய்க் கள்விற்பனை செய்வதை நடக்கவொட்டாமல் கள்ளுக்கடையிலேயே போய் விற்பனை செய்யும்படியாகப் பார்த்துக்கொள்ளும்படி தமது சப் இன்ஸ்பெக் டர்களுக்கு உத்திரவு அனுப்பியதாக எழுதப்பட்டிருந்தது. அதற் கிணங்க 9 நாளாய்த் திருட்டு விற்பனை நடக்கும் மேற்சொல்லிய கேஸ் ஸ்ரீ ராமச்சந்திர ராவ் அவர்களிடம் ருஜுப்படுத்தப் பட்டது. அன்னார் நாமக்கல்லுக்கு அன்றிரவே சென்று இன்பெக்டர் அவர் களை நேரில் சந்தித்தார்கள்.

அதன்பயனாக இன்ஸ்பெக்டர் அவர்கள் 17, 18, 19-ந் தேதி களில் இப்பிராந்தியங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து சப் இன்ஸ் பெக்டர்களுக்கு வேண்டிய வற்றைக் கூறினார்போல் தோன்று கிறது. ஆயினும் கலால் இலாகா சிப்பந்திகள் மனம் மாறியதாகத் தெரியவில்லை. இவர்கள் கிராமத்தார்களுடன் நடத்தும் சம்பாஷணை யானது இன்னும் குடி அவசியமாய்த்தான் இருக்கிறது என்னும் பதிலைப் பெறவேண்டுமென்ற ஆவலைக் காட்டிற்றென ஒரு கிராம முனிசீப் கூறினார்."

ஈரோடு தாலூகா திங்களூர் பிர்க்காவில் ஸ்ரீமான் எம். ஏ. ஆண்ட முத்துக்கவுண்டரின் முயற்சியினால் தீவிர மதுவிலக்குப் பிரசாரம் நடந்து, அதன் பயனாக திங்களூர், நல்லம்பட்டி இவ்விரண்டு ஊர்களிலும் சாராயக் கடைகள் சேர்ந்தாற்போல் இரண்டு தடவைகளில் ஏலம் போக வில்லை. அதன்மேல் அந்தக்கடைகளை ஒரு வருஷத்திற்குத் தாற்காலிக மாக மூடிவைக்கும்படி கலால் கமிஷனர் உத்திரவிட்டிருக்கிறார்.

மதுவிலக்கு வினா விடை.

12

வினா:—மது விலக்குச் சட்டம் செய்வதற்கு நீங்கள் சொன்ன காரணங்கள் எல்லாம் யுக்திக்குப் பொருத்தமாகவே யிருக்கின்றன. ஆனால் அநுபவத்தில் எப்படியிருக்குமோ? இது வரையில் எந்த நாட்டிலாவது மது விலக்குச் சட்டம் செய்து பார்த்திருக்கிறார்களா?

விடை:—ஆம், பார்த்திருக்கிறார்கள். அமெரிக்கா தேசத்தில் தற்போது பூரண மது விலக்குச் சட்டம் அமுலிலிருந்து வருகிறது.

வினா:—அப்படியா? அமெரிக்கா என்பது எங்கே யிருக்கிறது? அதில் வசிக்கும் ஜனங்கள் என்ன சாதியார்?

விடை:—அமெரிக்கா என்பது பசிபிக் சமுத்திரத்துக்கும் அத்லாந்திக் சமுத்திரத்துக்கும் நடுவிலுள்ள ஒரு பெரிய கண்டம். பூமண்டலத்தில் நாம் வசிக்கும் ஆசியாகண்டமும், மற்ற ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களும் ஒரு புறத்தில் இருக்கின்றன. அமெரிக்கா கண்டம் மற்றொரு புறத்தில் இருக்கிறது. இது மறுபடியும் வட அமெரிக்கா, தென்னமெரிக்கா என்று இரண்டு கண்டங்களாகப் பிரிந்திருக்கிறது. இத்தகைய பெரிய பூப்பிரதேசம் ஒன்று இருக்கிறதென்பதே வெகு காலம் வரை ஐரோப்பியர்களுக்குத் தெரியாமலிருந்தது. சுமார் 500 வருஷத்துக்குமுன் கொலம்பஸ் என்னும் ஐரோப்பியர் அமெரிக்காவுக்குப் போனார். அதன் பின்னர் ஐரோப்பாவிலுள்ள பற்பல தேசத்தாரும் அமெரிக்காவுக்குச் சென்று குடியேறினார்கள். தற்போது அமெரிக்காவில்வசிப்பவர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்கள் தான்.

வினு:—அமெரிக்கா முழுவதும் ஒரே அரசாட்சிக் கடங்கின இராஜ்யமா?

விடை:—இல்லை; அநேக இராஜ்யங்கள் இருக்கின்றன. வட அமெரிக்காவில் கானடா என்னும் பகுதி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற் குட்பட்டது. மற்ற இராஜ்யங்களெல்லாம் குடியரசுகள். இவைகளில் முதன்மையானது யுனைடெட் ஸ்டேட்ஸ் என்று சொல்லப்படும் அமெரிக்க ஐக்ய நாடு. சாதாரணமாக அமெரிக்கா என்று வழங்குவது இந்த நாட்டைத்தான். இந்த நாட்டிலேயே பூரண மது விலக்குச் செய்திருக்கிறார்கள்.

வினு:—அப்படியா? இந்த தேசம் நமது இந்தியாவைவிடப் பெரியதா? சின்னதா?

விடை:—இந்தியாவை விட மிகப்பெரியது. இந்தியாவின் விஸ்தீரணம் 17 லட்சம் சதுரமைல் தான். அமெரிக்க ஐக்ய நாட்டின் விஸ்தீரணம் 37 லட்சம் சதுர மைல்.

வினு:—ஜனத்தொகை எவ்வளவு?

விடை:—சுமார் 12 கோடி.

வினு:—ஜனங்கள் என்ன சாதியார்?

விடை:—பெரும்பாலும் இங்கிலாந்திலிருந்து சென்று குடியேறிய ஆங்கிலேயர்களின் சந்ததிகள். ஆங்கிலந்தான் இராஜாங்க பாஷை.

வினு:—அப்படியானால் அவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக் குட்பட்டிராமல் தனித்திருப்பதற்குக் காரணம் என்ன?

விடை:—முதலில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்தான் இருந்தார்கள். ஆனால் இங்கிலாந்தில் மூன்றாவது ஜார்ஜ் மன்னர் அரசாண்டபோது, சில மனக்குறைகள் ஏற்பட்டு ஒன்பது வருஷகாலம் தாய் நாட்டை எதிர்த்துப் பெரும் போர் செய்து கடைசியில் பூரண சுதந்திரம் பெற்றார்கள்.

வினு:—அமெரிக்காவின் பொருள் நிலைமை என்ன? இந்தியாவை விட ஏழைத் தேசமா?

விடை:—இல்லை இல்லை. இந்தியாவைவிட எவ்வளவோ மடங்கு பணக்கார தேசம். உலகத்திலேயே தற்போது பணம் மிகுந்த நாடு அமெரிக்காதான். இங்கிலாந்து, பிரான்ஸு முதலிய ஐரோப்பாவின் முக்கிய நாடுகள் அமெரிக்காவுக்குக் கடன் பட்டவை.

* * * *

13

வினு:—அமெரிக்காவில் பூரண மது விலக்குச் சட்டம் எப்போது, எந்த விதமாக நிறைவேறியது?

விடை:—அமெரிக்காவின் அரசாங்க அமைப்புச் சட்டத்திலேயே இதை ஒரு திருத்தமாகச் சேர்த்தார்கள். இதற்கு முன் இத்தகைய

திருத்தங்கள் 17 செய்யப்பட்டிருந்தன. ஆகையால் மது விலக்குச் சட்டத்துக்கு 18-வது திருத்தம் என்று சாதாரணமாய்ப் பெயர் வழங்குகிறது. இந்தத் திருத்தம் 1917-ம் வருஷத்தில் நிறைவேறியது.

வினு :—அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் அரசாங்கத்தாரே யதேச்சாதிகாரமாய்ச் செய்து விட்டார்களா ? பொது ஜனங்களின் சம்மதத்தின்பேரில் செய்யப்பட்டதா ?

விடை :—அமெரிக்காவிலுள்ள அரசுமுறை ஜனநாயகம் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். அங்கே அரசாங்கம் யதேச்சாதிகாரமாய் ஒன்றும் செய்யமுடியாது. பெரும்பாலான ஜனங்களின் விருப்பத்தின் பேரிலேயே எந்த சட்டமும் செய்யமுடியும். அதிலும், அரசாங்க அமைப்பிலேயே திருத்தம் செய்வது எளிதில் முடியாத காரியம்.

வினு :—அமெரிக்க அரசாங்க அமைப்பில் திருத்தம் செய்வது எப்படி நடைபெறும் ?

விடை :—முதலில் அமெரிக்காவின் காங்கிரஸ் மகாசபையில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினரால் அத்திருத்தம் ஒப்புக்கொள்ளப் படவேண்டும். பிறகு அதை மாகாணங்களின் சம்மதத்துக்கு அனுப்புவது வழக்கம். மொத்தம் உள்ள மாகாணங்களில் நாலில் மூன்று பங்கு மாகாணங்கள் ஒப்புக்கொண்டால் திருத்தம் அரசாங்க அமைப்பில் சேர்க்கப்படும்.

வினு:—இந்த முறையில் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்திற்குப் பொது ஜனங்களின் ஆதரவு இருக்கிறதென்று சொல்லலாமா ?

விடை :—கட்டாயம் சொல்லலாம். ஏனென்றால் மேற்சொன்ன மத்திய காங்கிரஸ் சபையிலும், மாகாண சட்ட சபைகளிலுமுள்ள ஒவ்வோர் அங்கத்தினரும் பொது ஜனங்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

வினு :—காங்கிரஸ் எப்போது இந்தத் திருத்தத்தை ஒப்புக்கொண்டது ?

விடை :—1917-ௗ டிசம்பர்ீ 18உ.

வினு :—எத்தனை மாகாணங்கள் ஷை திருத்தத்தை அங்கீகரித்தன ?

விடை :—அமெரிக்காவில் மொத்தம் 48 மாகாணங்கள் உண்டு. இவைகளில் 46 மாகாணங்கள் அங்கீகரித்தன. இரண்டே இரண்டு மாகாணங்கள்தான் ஒப்புக்கொள்ளவில்லை.

வினு :—அப்படியா ? இவ்வளவு ஆதரவோடு நிறைவேறி யிருக்கையில் அமெரிக்கா ஜனங்கள் மதுவிலக்குச் சட்டத்தை வெறுப்பதாகச் சொல்கிறார்களே, அது என் ?

விடை :—இது முழுப் பொய். சுயநலங்கொண்ட மது வியாபாரிகளும், அவர்களிடம் பணம் பெறுபவர்களும் கட்டிவிடும் கதை. அமெரிக்

காவின் அரசாங்க அமைப்பில் இதுவரை மொத்தம் 19-திருத்தங்கள் நிறைவேறியிருக்கின்றன. ஆனால் 18-வது திருத்தத்தைப்போல் அவ்வளவு ஆதரவு அவைகளில் எதுவும் பெற்றதில்லை.

வினு:—ஒருவேளை அப்போது அவசரப்பட்டுச் சட்டம் நிறைவேற்றிவிட்டு, இப்போது அதை வெறுக்கக் கூடு மல்லவா?

விடை:—கிடையவே கிடையாது. மதுவிலக்குச் சட்டத்தைப் போல் அவ்வளவு நிதானமாக வேறு எந்தச் சட்டமும் நிறைவேற்றப்படவில்லை யென்று சொல்லலாம்.

வினு:—அதெப்படி? 1917-ம் வருஷத்துக்கு முன்பே அமெரிக்காவில் மதுவிலக்குக் கிளர்ச்சி நடந்து வந்ததா?

விடை:—கிளர்ச்சி நடந்தது மட்டுமன்று; மேற்படி 18-வது திருத்தம் நிறைவேறி அமுலுக்கு வருவதற்கு முன்னால், மொத்தம் 33 மாகாணங்கள் தத்தம் எல்லைக்குள் மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வந்திருந்தன.

வினு:—அப்படியா? முதன் முதலில் எந்த மாகாணம் மதுவிலக்குச் சட்டம் செய்தது?

விடை:—1851-ம் வருஷத்தில் முதன் முதலாக மேயின் என்னும் மாகாணம் மதுவிலக்குச் சட்டம் செய்தது. அதுமுதல் 66 வருஷகாலம் தேசமெங்கும் கிளர்ச்சி நடந்து அமெரிக்காவின் மொத்த விஸ்தீரணத்தில் 100க்கு 85 பங்கு மதுவிலக்குச் செய்த பிறகுதான் மத்திய காங்கிரஸ் சபையில் பூரண மதுவிலக்குத் திருத்தம் நிறைவேறியது. ஆகவே அமெரிக்கர்கள் அவசரப்பட்டுச் சட்டம் செய்து விட்டதாகச் சொல்வதற்குச் சிறிதும் இடமில்லை.

* * * *

14

வினு:—அமெரிக்காவில் பூரண மதுவிலக்குச் சட்டம் எப்போது அமுலுக்கு வந்தது?

விடை:—1920-ஞு ஜனவரிமீ 16உ.

வினு:—எனவே, சட்டம் அமுலுக்கு வந்து இப்போது பத்து வருஷம் ஆகிவிட்டதல்லவா? இந்தப் பத்து வருஷ அநுபவத்துக்குப் பிறகும் அமெரிக்கப் பொது ஜனங்கள் சட்டத்தை ஆதரிக்கிறார்களா?

விடை:—இதில் சந்தேகமேயில்லை. கடைசியாக நடந்த அமெரிக்க அக்கிராசனர் தேர்தலே இதற்கு ருசுவாகும். அமெரிக்கக் குடியரசின் அக்கிராசனர் ஐந்து வருஷத்துக் கொருமுறை பொது ஜனங்களின்

வாக்கினுல் நேராகத் தேர்ந்தெடுக்கப் படுகிருர். சென்றவருஷம் நடந்த தேர்தலில் இப்பதவிக்கு இரண்டு பேர் போட்டியிட்டார்கள். இவர்களில் மதுவிலக்குச் சட்டத்தைப் பலமாக ஆதரித்துநின்ற ஹெர்பர்ட் ஹூவர் என்பவரே வெற்றி பெற்ருர். மேற்படி சட்டத்தைத் தளர்த்தி விடலாமென்று சொல்லிய கவர்னர் ஸ்மித் என்பவர் பெருந்தோல்வி யடைந்தார். வாக்குத் தொகுதிகளில் 444 தொகுதிகள் ஹூவருக்கும், 87 தொகுதிகள் ஸ்மித்துக்கும் வாக்களித்தன. ஆகவே மிகப் பெரும் பாலான அமெரிக்க மக்கள் மதுவிலக்குச் சட்டத்தை ஆதரித்து நிற்கிருர்கள் என்பதில் சந்தேகமில்லை.

வினு:—சட்டம் செய்வதற்கு முன்னுலிருந்த நிலைமையுடன் ஒப்பிட்டால், அனுபவத்தின் பயனுக ஜனங்களின் ஆதரவு பெருகி யிருக்கிறது, அல்லது குறைந்திருக்கிறது என்று காட்டமுடியுமா?

விடை:—ஆதரவு பெருகியே வந்திருக்கிறதென்று நன்கு காட்ட முடியும். 1926-ம் வருஷத்தில் நடந்த மாகாணத் தேர்தல்களில் மது விலக்குச் சட்டத்துக்கு சாதகமான வாக்குகள் 1920-ம் வருஷத்தைவிட மிக்க அதிகமாயிருந்தன.

	1920		1926	
மாகாணம்	சாதகம்	பாதகம்	சாதகம்	பாதகம்
மிஸ்ஸோரி	481,880	420,581	569,931	294,388
இல்லினுய்	840,631	556,592	1065,942	512,111

மஸாசுஸெட் என்ற மாகாணத்தில் 1922-ம் வருஷம் நடந்த தேர்தலில் மதுவிலக்குக்கு விரோதமாக 103,876 வாக்குகள் அதிகம் இருந்தன. 1926-ல் இது முற்றும் மாறுதலடைந்து மதுவிலக்குக்குச் சாதகமாக 200,000 அதிக வாக்குகள் கிடைத்தன. முன்னுல் மதுவிலக்கை எதிர்த்தவர்களும், அநுபவத்தில் அதனுல் விளைந்த நன்மைகளைப் பார்த்த பின், சாதகமாகத் திரும்பி யிருக்கிருர்கள் என்பதற்கு இவை உதாரணங்களாகும்.

வினு:—அப்படியானுல் மதுவிலக்கினுல் நன்மை விளைந்தே யிருக்க வேண்டும். எந்த எந்தத் துறைகளில் விசேஷ நன்மை விளைந்திருக்கிறது, என்று சொல்ல முடியுமா?

விடை:—பொருளாதாரம், சுகாதாரம், சன்மார்க்கம் ஆகிய மூன்று துறைகளிலும் அளவிலாத நன்மை விளைந்திருக்கிறது.

பிரசவமும் பிராந்தியும்

[ஸ்ரீமான் சதாசிவம்]

1

"அடே நாணு! கமலத்தின் பிரசவத்துக்கு எங்க அக்காளை வரச் சொல்லிக் கடுதாசி எழுதுடா. அவளை விட்டால் நமக்கு எல்லாந் தெரிந்த மனுஷாள் யாரிருக்கா?" என்றாள் நாராயணசாமி அய்யரின் தாயாரான வேதாம்பாள்.

"அந்தக் கர்நாடக இழவெல்லாம் என்னத்துக்கு? இந்தக் கிழட்டுப் பிணங்களுக்கெல்லாம், மருத்துவத்தைப் பற்றி என்ன தெரியும்? முன்பு சுப்புலக்ஷ்மி, வீராயியின் மருத்துவத்தால் தான் செத்தாள் என்று நான் சொல்லுவேன். நான் உங்க அக்காளுக்குக் கடுதாசி எழுதப் போவதில்லை. ஆஸ்பத்திரியிலிருந்து தேர்ந்த மருத்துவச்சியைக் கூட்டிவந்து பிரசவத்தைக் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று மள, மள வென்று ஒரே மூச்சில் பேசினார் நாராயணசாமி அய்யர்.

நாராயணசாமி அய்யர் ஆங்கில நாகரிகத்தில் ஆர்வ மிக்கவர். இந்தியர் பழக்க, வழக்கங்களை இகழும் குணமுடையவர். இவருடைய முதல் மனைவி சுப்புலக்ஷ்மி பிரசவத்தின் போது குழந்தை பெறமுடியாமல் இறந்தனள். இரண்டாவதாக, கமலம் என்னும் பெண்ணை மணந்தார்.

கமலத்தின் பிரசவத்திற்காகத் தான் நாராயணசாமி அய்யரின் தாயார், நாம் முற்கூறியவாறு தன் குமாரனிடம் பேசியது. வேதாம்பாளுக்கு, தான் இறப்பதற்குள் நாராயணசாமி அய்யரின் குழந்தையைக் காண வேண்டு மென்னும் சபலம்.

குமாரனுடைய பதிலைக் கேட்டதும், வேதாம்பாள், அதைப்பற்றி வேறொன்றும் பேசாது விடுத்தனள். நாராயணசாமி அய்யரும், ஆஸ்பத்திரிக்குச் சென்று ஒரு மருத்துவச்சிக்கு ஏற்பாடு செய்து வரப் புறப்பட்டார்.

2

பதினைந்து நாளைக்குப் பின்னர் நாராயணசாமி அய்யர் வீட்டில் கொஞ்சம் தடபுடல் உண்டாயிற்று. அவசரமாய் ஆஸ்பத்திரிக்கு ஆள் அனுப்பினார்கள். மருத்துவச்சியும் வந்து சேர்ந்தாள்......நாராயணசாமி அய்யர் ஓர் ஆண் மகவுக்குத் தந்தையானார். வேதாம்பாளின் சந்தோஷமோ சொல்லி முடியாது.

"பிராந்தி பாட்டில் ஒன்று வாங்கி வந்திருக்கிறீர்களா?" என்றாள் மருத்துவச்சி.

"இல்லை" என்றார் அய்யர்.

"பனிகாலமாக இருக்கிறது. பிராந்தி வேணுமே?"

"பாரஸ்ட் ரேஞ்சர் வீட்டில் பிராந்தி இருக்கும். நான் போய் வாங்கி வருகிறேன்."

"சரி, குளிர்காலமான படியால் கொஞ்சம் அதிகமாகவே கொடுங்கள். நான் நாளைக் காலை வருகிறேன்" என்று சொல்லிவிட்டு மருத்துவச்சி சென்றாள்.

பிராந்தியை மருந்தென்று கருதும் அறிவீனம் இன்னும் சில டாக்டர்களிடம் கூட இருக்கிறது. மேனாட்டின் பிரபல ஆராய்ச்சிக் காரர்களெல்லாம் இந்த அறிவீனத்தைக் கண்டித்திருப்பது அவர்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க, அரைப் படிப்புள்ள மருத்துவச்சிகளைப் பற்றிக் கேட்பானேன்?

நாராயணசாமி அய்யர் வெளியிற் சென்று, கொஞ்ச நேரத்திற் கெல்லாம் ஒரு பிராந்தி புட்டியுடன் திரும்பி வந்தார்.

கமலத்திற்கு பிராந்தியைக் கொடுக்கும் விஷயத்தில், வேதாம்பாளுக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. எனினும், தன் குமாரனின் நிர்ப்பந்தத்திற்காக, அந்த அம்மாள் நாராயண அய்யர் ஊற்றிக் கொடுத்த பிராந்தியை, கமலத்தினிடம் கொடுத்து, குடிக்கச் சொன்னாள்.

கமலத்திற்கு "பிராந்தி" என்று சொன்ன பொழுதே "வாந்தி" வந்து விடும் போலிருந்தது. இருப்பினும், தன் தேக சௌக்கியத்தைக் கோரியே அதைக் குடிக்கச் சொல்லுகிறார்களென்றெண்ணி, அதை வாங்கிக் குடித்தாள்.

நாராயணசாமி அய்யர் வெளியே சென்றார். வேதாம்பாள் கமலத்துக்குப் பத்தியம் தயாரிப்பதற்காகச் சமையலறைக்குப் போனாள். குழந்தை குறு குறு வென்று விழித்துக்கொண்டு கமலத்தின் அருகில் படுக்கையில் கிடந்தது.

3

ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் கமலத்திற்கு கண்கள் மங்கின. தலை கிறு கிறென்று சுழன்றது. உடம்பு ஆகாயத்திற் பறப்பது போன்றிருந்தது. அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. திடீரென்று படுக்கையின் மீது சாய்ந்தாள்.........

கொஞ்சங் கொஞ்சமாக மயக்கம் தெளிய வாரம்பித்தது. தன் நிலைமையைப் பற்றி ஞாபகம் வந்தது. தேகம் மிகவும் பலஹீனமா யிருந்தது. மிகவும் கஷ்டத்துடன் எழுந்து உட்கார்ந்தாள். உடனே குழந்தை நினைவு வரவே ஆவலுடன் பக்கத்தில் நோக்கினாள். குழந்தை யிருந்தது. ஆனால் அதைப் பார்த்ததும் ஏனோ அவள் நெஞ்சம் திடுக்கிட்டது. குழந்தையைக் கையிலெடுத்தாள். அது அசைவற்றிருந்தது. பேச்சு மூச்சில்லை. .....அந்தோ! இப்போது அது குழந்தையல்ல; பிணம்! சொல்லமுடியாத துன்பத்துக் கிடையில் ஒரு பயங்கரமான எண்ணம் அவள் மனதில் உதித்தது. அதை எண்ணவும் அவள் மனம் நடுங்கியது........"பிராந்தி மயக்கத்தினால் கீழே விழும்போது குழந்தை அடியிற் சிக்குண்டு இறந்திருக்கலாமோ?"......அதுதான் உண்மை. பாழும் மது மயக்கத்தில், தான் குழந்

தையின் மீது விழுகிறோம் என்றுகூடக் கமலம் அறிந்துகொள்ள முடியவில்லை.

அளவிலாத மனோவேதனையுடன், "ஆ! பாவி!! நானே என் குழந்தையைக் கொன்றேனே!" என்று கத்திய வண்ணம் கமலம் திடீரெனக் கீழே சாய்ந்தாள்.

பலவீனமான நிலையில் மதுசாரம் உட்சென்றதின் பயனாக மிகவும் அலுத்துப் போயிருந்த அவளுக்கு, எதிர் பாராத விதமாக திடீரென்று பெருந்துக்கம் உண்டாகவே அவளது ஹிருதயம் வெடித்து விட்டது.

இறந்துபோன தனது குழந்தையின் ஆவியைக் கொஞ்சி சீராட்ட, கமலத்தின் ஆவியும் இம்மண்ணுலகை நீத்து, விண்ணுலகு ஏகிற்று.

* * * *

ஆசை மனைவியையும், அருமைக் குழந்தையையும் பறிகொடுத்த நாராயணசாமி ஐயர், தமது தாயார் வேதாம்பாளை வெகுவாக நொந்து கொள்கிறார். அவர்களுடைய சாவுக்கு அவளுடைய அஜாக்கிரதை தான் காரணமென்று அவர் பழி போடுகிறார். எனினும் ஆஸ்பத்திரி மருத்துவச்சிகளிடம் அவருக்கிருந்த நம்பிக்கை அடியோடு ஒழிந்து போயிற்று.

இதோ படகிலமர்ந்து கவலை யின்றிச் செல்லும் மனிதனைப் பாருங்கள். அடுத்த கணத்திலே அவன் இந்தப் பெரிய நீர் வீழ்ச்சியிலகப்பட்டு அதல பாதாளத்தில் வீழ்ந்து நாசமடையப் போகிறான். எனினும் அவன் அப்பேரபாயத்தை உணரவில்லை. மிதமாகக் குடிக்க ஆரம்பிக்கிறவர்கள் கதி இதுவே யாகும்.

ஒரு கடையில் பலி

சென்னை கீழ்ப்பாக்கத்தில் கிறிஸ்துவ குருகுலம் நடத்திவரும், ரெவரண்ட் ஜே. ஸான்டேகிரன் அவர்கள் பின்வரும் விவரத்தை நமக்கு அனுப்பியுள்ளார் :—

இந்தியாவின் இரத்தம் வடிவதற்குக் காரணமாயுள்ள ரணங்களில், கள்ளுக் கடையும் ஒன்று. எங்கள் குருகுலத்துக் கருகில் புரசவாக்கம் ஹைரோட்டில் ஒரு கள்ளுக்கடை இருக்கிறது. இதன் வாசலில் தினந்தோறும் மிகவும் விகாரமான காட்சிகள் காணப்படுகின்றன. குருகுல மாணுக்கர்கள் இந்தக் கள்ளுக்கடைக்கு வரும் ஜனங்களைக் கணக்கிடலாமென்று தீர்மானித்தார்கள். அவ்வாறே மார்ச்சுமீ 12௳ முதல் 21௳ முடிய, காலை 6 மணி யிலிருந்து இரவு 8-30 வரையில் காவல் புரிந்து கணக்கிட்டார்கள். அதில் தெரியவந்த கணக்கு வருமாறு :—

தேதி	ஆண்கள்	பெண்கள்	குழந்தைகள்	மொத்தம்
12—3—30	1,392	5	2	1,399
13—3—30	1,637	7	21	1,665
14—3—30	1,631	26	18	1,675
15—3—30	1,726	29	27	1,782
16—3—30	2,171	36	62	2,269
17—3—30	1,810	21	12	1,843
18—3—30	1,617	38	37	1,692
19—3—30	1,653	16	13	1,682
20—3—30	1,267	—	—	1,267
21—3—30	1,468	14	60	1,542
மொத்தம்	16.372	192	252	16,816
தினசராசரி	1,637	19	25	1.682

கள்ளுக்கடை காலை 5-30க்கே திறந்து விடுவதாலும், இரவு 8-30க்குப் பிறகும் சிலர் கதவைத் திறந்து உள்ளே சென்று கள் வாங்குவதாலும் மேலே காட்டி யிருப்பதைவிடக் குடிகாரர்களின் தொகை அதிகமாகவே யிருக்கும். பெரும்பாலும் ஏழைக் கூலி ஜனங்களே கடைக்கு வருகிறார்கள். அபூர்வமாக பிராமணர், முகமதியர், ஆங்கிலோ இந்தியர் முதலியவர்கள் சிலரும் காணப்பட்டனர்.

ஈசூப். சாயபுவின் மரணம்

[ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி ஐயர்]

ஜோலார்ப்பேட்டை கடைத்தெருவில் ரொட்டிக் கிடங்கில் வேலை செய்து ரொட்டி பிஸ்கோத்துகளை விற்றுவந்த ஈசூப் சாயபு என்பவன் ஓர் ஏழை முகம்மதிய சகோதரன். அவனுக்கு 5 சகோதரர்களும் வயது சென்ற தகப்பனும் கண்ணிழந்த வயது சென்ற தாயாரும் மனைவியும் இருமக்களும் உண்டு. தகப்பனுக்கு மூத்த மகன். வயது சுமார் 35 இருக்கும். மிகவும் நல்ல குணமுடையவன்; சாந்தமுள்ளவன்; கோபமும் மூர்க்கமுமான நடத்தைகள் அவனிடம் இல்லை. வியாபார தந்திரம் நிறைந்து ஆங்கிலோ இந்தியாகள் டிரைவர்கள் கார்டுமுதல் பணக்காரர்கள் ஏழைகள்வரையில் தன் இன்சொல்லால் வசீகரித்து வஞ்சனையின்றிக் குழந்தைகளிடம் கூடத் தவறில்லாமல் விக்கிரயம் செய்து வந்தான்.

நல்ல குணங்கள் பல நிறைந்திருந்தாலும் அவனிடம் ஒரு குற்றமிருந்தது. அதுதான் குடிப் பழக்கம். கள் சாராயம் குடிப்பது வழக்கமாயினும் குடித்த நிலைமையிலும் சண்டை சச்சரவுகள் மிஞ்சின வார்த்தைகள் அவன் எந்த சமயத்திலும் யாரிடமும் இது வரையில் உபயோகித்தவன் அல்ல. பலருக்கு அவன் குடிகாரன் என்ற சந்தேகம் கூட உதிக்காமலிருந்தது. நான் அவனிடம் நெருங்கிப் பழகிய சமயம் விமோசனத்தைக் காட்டிப் படங்களை விளக்கிக் குடியை விடுமாறு வேண்டுவது உண்டு. அவனும் கூடவே "குடிப்பது கூடாது, கொரானில் கூட குடி கூடாது என்று தான் கூறுகிறது" என்று பதில் சொல்லுவான்.

ஜோலார்ப்பேட்டை ஸ்டேஷன் லோகோ ஊழியர்களின் சம்பளம் அளிக்கும் தினமான 18—4—30 பகல் 12 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டவன் ஸ்டேஷனில் ரொட்டி பிஸ்கோத்து விற்றுவிட்டு அந்தப் பணத்திலிருந்து கோடியூரில் உள்ள சாராயக் கடையில் நன்றாய்க்குடித்துவிட்டுக் குறுக்குவழியாய் லோகோ ஷெட்டிற்கு வந்தான். ரயில் கம்பிகளைத் தாண்டிவரும் சமயத்தில் போதை அதிகமாகி மதிமருண்டு திக்பிரமையாய் நின்றுவிட்டானும். ஷெட்டிற்கு வரும் இஞ்சின் பின்னால் வந்து கொண்டிருந்தது. அது மோதவே கீழே விழுந்துவிட்டான். சக்கரம் தலையில் ஏறிவிட்டது. அந்தோ! பாவம்! மனைவிமக்கள் பெற்றோர் சகோதரர்கள் பரிதவிக்க உயிர் நீத்தான். கோரக் காட்சி! எங்கும் இரத்த ஆறு ஓடிவிட்டது. போலீஸ் உத்தியோகஸ்தர்கள் பார்வையிட்ட பிறகு "குடி வெறியால் தானே சிக்குண்ட எதிர்பாராத மரணம்" என்று தீர்மானித்து அடக்கம்செய்ய அனுமதியளித்தார்கள். இரவு 8 மணிக்குமேல் சுற்றத்தார்கள் பிரேதத்தை எடுத்தேகினார்கள்.

ஏழைக்குடும்பம் கெட்டது. தலைவனைப் பிரிந்த மனைவி இனி என்செய்வாள்? கண்ணிழந்த தாயும் தகப்பனும் சகோதரர்களும் அழுத துயரம் கண்டோர் மனதைக் கரையச் செய்தது. இந்தப் பரிதாப மரணத்துக்கும், அதன் விளைவான துன்பங்களுக்கும் பொறுப்பாளி யார்? கள்ளு சாராயக் கடைகளை வைத்து நடத்தும் சர்க்கார் பதில் சொல்வார்களா?

திருட்டுக் கள்

காந்தி ஆசிரமத்தைச் சுற்றி கள்ளு சாராயக்கடை மூடிய பிரதேசத்தில் தீவிர மதுவிலக்குப் பிரசாரம் செய்து, திருட்டுக்கள் வியாபாரம் நடைபெறுமல் பார்த்துக்கொள்ளும் தொண்டை ஸ்ரீமான் பழனிசாமி பண்டாரம் நடத்தி வருகிறர்.

மேழிப்பள்ளி என்னும் கிராமத்தில் திருட்டுத்தனமாகக் கள்ளு கட்டப் பட்டதை அவர் கண்டுபிடித்து கலால் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். இதன்மேல் கள்ளுக்கட்டியவன்மீது வழக்கு நடந்து அவனுக்குப் பத்துரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது ! உப்புச்சட்டத்தை மீறியவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனைகளையும், கலால் சட்டத்தை மீறியவர்களுக்கு விதிக்கப் படும் தண்டனையையும் ஒப்பிட்டுப் பாருங்கள் !

கள்ளுக் கடைக்காரர்களின் தொல்லையைப்பற்றி முந்தைய இதழிலேயே குறிப்பிட்டிருக்கிறேம். இவர்களில் இரண்டொருவர் கடை மூடிய பிரதேசத்தின் எல்லைக் கிராமங்களில் திருட்டுக் கள் கொண்டுவந்து விற்பதாகத் தெரியவருகிறது. ஆனால் இது மிகவும் சொற்பம் என்பதை நினைவில் வைக்கவேண்டும். கடை மூடுவதற்கு முன்னால் இந்தப் பக்கத்தில் தினந்தோறும் 1000 ஜனங்கள் பகிரங்கமாய்க் குடித்தார்களென்றல், இப்போது வாரத்திற்கு ஒருதடவை 20, 30 பேர் திருட்டுத் தனமாய்க் குத்தகைதார் கொண்டுவரும் கள்ளைக் குடிக்கலாம். மற்றும் சுமார் 50 பேர் வெளியூர்க் கடைகளுக்குப் போய்க் குடித்துவிட்டு வரலாம். பாக்கியுள்ள 900-த்துக்கு மேற்பட்ட ஜனங்கள் குடிப்பேய் வாயிலிருந்து காப்பாற்றப் பட்டிருக்கிறர்களென்பதில் சந்தேகமில்லை.

இந்த சொற்ப அளவு திருட்டுக் கள் வியாபாரத்தையும், கலால் இலாகா சிப்பந்திகளின் ஒத்துழைப்பு இருந்தால் உடனே நிறுத்திவிடலாம். ஆனல் அவர்கள் அவ்வளவு சிரத்தை காட்டாத படியால் கிராம ஜனங்களின் கட்டுப் பாட்டின் மூலம் நிறுத்துவதற்கு முயற்சி செய்யப் பட்டு வருகிறது.

பொதுவாக, கலால் நிர்வாகத்தின் போக்கைக் கவனித்தால் திருட்டுக் கள் வியாபாரத்தைத் தடுப்பதில் கவலையிருப்பதாகவே தோன்றவில்லை. இந்தக் கவலையின்மைக்கு ஒரு முக்கியமான காரணமும் இருக்கிறது. அது என்னவென்றல், கடை ஏலம் விடும்போது கலால் உத்தியோகஸ்தர்கள் ஏலம் எடுக்க வருவோரைத் தூண்டி ஏராளமாகத் தொகையைத் தூக்கிவிடுகிறர்கள். எனவே பின்னல் குத்தகைக்காரன் நஷ்டமடையாமலிருக்கும் பொருட்டு, அவன் விதிகளை மீறி சந்துக் கடைகள் நடத்துகையில் பராமுகமாய் விட்டுவிடுதல் அவசிய மாகிறது.

சர்க்கார் பகிரங்கமாய்க் குடிக்க வசதிசெய்து கொடுத்துள்ள இடங்களில் கடைமூடிய பிரதேசத்தைவிட அதிகமாகவே திருட்டுக்கள் வியாபாரம் நடக்கின்றது. இதை நடத்துபவர்கள் பெரும்பாலும் சர்க்கார்

கடைகளின் குத்தகைக்காரர்களே. இந்தக் குற்றங்களில் ஒரு சிலவற்றைத்தான் கண்டுபிடித்து வழக்கு நடத்துகிறார்கள். அப்படி நடத்தும் வழக்குகளிலும் சொற்பதொகை அபராதம் விதித்து விட்டு விடுகிறார்கள். நூற்றுக்கணக்கில் லாபம் வருவதற்கு இடமிருக்கும்போது, பத்தும் இருபதும் அபராதம் போட்டால் என்ன உபயோகம்? ஒருமுறை அபராதம் விதித்தவர்களுக்கு மறுபடி குத்தகை கொடுப்பதில்லை யென்னும் ஏற்பாடும் கிடையாது.

இலங்கை அரசாங்கத்தின் கலால் இலாகா கமிஷனர் 1926-ம் வருஷத்து நிர்வாக அறிக்கையில் இது சம்பந்தமாகக் கூறுவதை இங்கே எடுத்துக் காட்டுவது பொருந்தும்.

4873 திருட்டுக் கள் குற்றங்கள் பிரஸ்தாப ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டனவென்றும், கண்டுபிடிக்காதவை இன்னும் ஏராளமாய் நடப்பதாகவும் அவர் குறிப்பிட்டு விட்டு, அவைகளைத் தடுப்பதற்கு மூன்று வழிகள் சொல்லுகிறார் :—

(1) பதனி இறக்குவதைத் தடுத்துவிட வேண்டும். பல இடங்களில் வெல்லம் செய்வதாகச் சொல்லுபவர்கள் கள் உற்பத்தி செய்து வருகிறார்கள்.

(2) கள்ளுக்கடை குத்தகை விடும் முறையை மாற்றிவிட வேண்டும். பதனி இறக்குபவர்களுக் கடுத்தபடி குத்தகைக்காரர்கள் தான் திருட்டுக்கள் வியாபாரம் அதிகமாகச் செய்கிறார்கள். குத்தகைக்காரனின்றி எப்படி வேண்டியவர்களுக்குக் கள் விற்பதென்பது எனக்கும் தெரியவில்லை. ஸ்வீடன் தேசத்தில் கையாளும் முறை ஒருவேளை பயன்படலாம்.

(3) கலால் சட்டத்தை மீறுகிறவர்களுக்கு இன்னும் கடுமையான தண்டனைகள் விதிக்கவேண்டும். 1926-ம் வருஷத்தில் நடந்த திருட்டுக் கள் வழக்குகளில் சராசரி 12-ரூபாய், 13-ரூபாய், 25-ரூபாய் தான் அபராதம் விதிக்கப்பட் டிருக்கிறது. இத்தகைய சிறு அபராதங்களினால் குற்றங்கள் தடைப் படுவதில்லை."

வட நாட்டில் பல இடங்களிலும் கள்ளுக் கட்டும் ஈச்ச மரங்களைவெட்டித்தள்ளிவருகிறார்கள். இந்த ஈச்சமரங்கள் வேறு எந்தக் காரியத்துக்கும் பயனற்றவை. ஆனால் நமது தமிழ் நாட்டில் பெரும் பாலும் தென்னையிலிருந்தே கள் இறக்கப் படுகிறது. தென்னை மரங்களை நாம் வெட்டித் தள்ள முடியாது. கற்பக விருக்ஷமான தென்னையில் சுரக்கும் அமிர்தத்தை விஷமாக்கி குடிக்கும் அறிவீனத்தையே வெட்டித் தள்ள வேண்டும்.

முதல் நாள்

கள்ளுக்கடையில் குடித்துவிட்டுக் கலகம் செய்ததற்காக இந்த ஏழைக் குடியானவனைப் போலீஸ்காரன் பிடித்துச் செல்கிறான்.

மறு நாள்

மறுநாள் அதே கள்ளுக்கடையில் "குடிக்கவேண்டாம்" என்று போதித்த குற்றத்துக்காக மதுவிலக்குத் தொண்டரைப் போலீஸ்காரன் கைது செய்கிறான்.

கள்ளரக்கனுடன் யுத்தம்

மகாத்மா காந்தி இம்மாதம் 4உ இரவு அர்த்த ராத்திரியில் கைதி செய்யப் பெற்ற விவரம் நேயர்களுக்குந் தெரிந்திருக்கலாம். அன்றைய தினம் பிற்பகலில் அடிகள் சூரத் நகரிலுள்ள சாதிப் பஞ்சாயத்துத் தலைவர்களின் கூட்டத்தில் மதுவிலக்கைக் குறித்துப் பேசினார். அந்நகரில் பதினெட்டு சாதிப் பஞ்சாயத்துகளில் மதுவை யொழிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேறி யிருக்கிறது. மொத்தம் 40,000 ஜனங்கள் இத் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்.

“மதுவிலக்குப் போரில் ஆணாகிய நான் தோற்றுவிட்ட படியால் பெண்களை என் உதவிக்கு அழைத்திருக்கிறேன். மது வியாபாரத்தை ஒழிக்கும்படி கலால் மந்திரிகளை நான் எவ்வளவோ தடவை கேட்டு விட்டேன். பதிலுக்கு வருமானம் கண்டுபிடித்துத் தரும்படி அவர்கள் சொல்கிறார்கள். கள்ளுவிற்று வருமானம் சேர்ப்பதைவிட, எங்கள் பிள்ளைகளின் படிப்பை வேண்டுமானாலும் நிறுத்தி விடுங்கள் என்று நான் கூறினேன். இதை ஒப்புக் கொள்ளவில்லை. சுயராஜ்யத்தின் கீழ் மதுவியாபாரம் இருந்தாலும் இதே சங்கடந்தான் ஏற்படும். ஆகையால் இப்போதே குடியை யொழித்துவிடும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். குடியை யொழிக்க இதுதான் சரியான தருணம்” என்று மகாத்மா காந்தி இக் கூட்டத்தில் கூறினார். பஞ்சாயத்துகளின் தீர்மானத்தைக் கண்டிப்பாய் நடத்திவைப்பதாக, பஞ்சாயத்துத் தலைவர்கள் உறுதி சொன்னார்கள்.

* * * *

ஆமதாபாத்தில் தொழிலாளர் சங்கத்தினால் மதுக்கடை மறியல் நடத்தப்பட்டு வருகிறது. மிகச் சிறந்த மறியல் முறையை இவர்கள் கையாண்டு வருகிறார்கள். கள்ளுக்கடை வாசலில் தொண்டர்கள் நின்று கடைக்கு வருவோரை யெல்லாம் கவனித்துக் கொள்கிறார்கள். அங்கு அவர்களிடம் ஒன்றும் பேசுவதில்லை. பிறகு, அவர்கள் வீட்டுக்குச் சென்றதும் பின்னோடு போய் அவர்களுக்குப் புத்தி சொல்கிறார்கள். இது நல்ல பயன் தந்து வருகிறது. ஏப்ரல்மீ 9உ முதன் முதல் மறியல் ஆரம்பிக்கப் பட்டபோது ஒரு கடையில் மொத்தம் 720 பேர் குடிக்க வந்தார்கள். ஆனால் 23உ யன்று மொத்தம் 146 பேர்தான் வந்தார்கள். மொத்தத்தில் சாராய விற்பனை தினம் 241 காலன் சராசரியில் விற்று வந்திருக்க, இப்போது 50 காலனுக்கு வந்துவிட்டது. இது குத்தகைதாரர்களுக்குப் பொறுக்கவில்லை. இவர்கள் சட்ட விரோதமாக, தங்கள் சொந்த வீடுகளிலும் இன்னம் சந்து பொந்துகளிலும் கள்ளை விற்கத் தொடங்கியிருக்கிறார்கள். கலால் இலாகா சிப்பந்திகள் இந்தச் சட்ட விரோதமான காரியங்களைப்பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு குத்தகைக்காரர் தன் சொந்த பங்களாவுக் கருகில்

கள்ளு விற்பதறிந்து தொண்டர்கள் அங்கே சென்று கவனித்தார்கள். குத்தகைக்காரர் காலிகளை விட்டு அவர்களைத் தாக்கச் செய்தார். இதனால் எட்டு தொண்டர்களுக்குக் காயம் ஏற்பட்டது. போலீஸார் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆயினும் தொண்டர்கள் மறியலை விடாமல் நடத்தி வருகிறார்கள்.

* * * *

குஜராத்தில் பெண்மணிகளை கள்ளுக்கடை மறியலும், அன்னிய ஜவுளிக்கடை மறியலும் செய்யும்படி மகாத்மா காந்தி உத்திரவிட்டது நேயர்கள் அறிந்ததே. குஜராத் பெண்மணிகள் அவ்வாறு மறியல் தொடங்குவதற்குமுன் இராஜப் பிரதிநிதிக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். "குடியினால் எத்தனையோ குடும்பங்கள் அழிந்துவிட்டன. அறிவையும், உடலையும் ஒருங்கே நாசமாக்கும் மது வியாபாரத்தையும், லாகிரிப் பொருள்களின் வியாபாரத்தையும் தடுக்கவேண்டியது அரசாங்கத்தின் முதன்மையான கடமை. அப்படிச் செய்யாதபடியால் நாங்கள் மது விலக்குப் போரில் இறங்குகிறோம்" என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

* * * *

ஏப்ரல்மீ 28வ பில்லிமோரா என்னுமிடத்தில் காந்திஜி கூறியதாவது:—"கள்ளை யொழிக்காதவரையில் அஹிம்சா முறையினால் நாம் சுயராஜ்யம் பெறமுடியாது. சுயராஜ்யத்தின் கீழ் இந்தியக் குடியரசின் அக்கிராசன பதவிக்கு ஒரு குடிகாரன் வரும்படி இருக்கக் கூடாது. அவ்வாறே குடிகார வாக்காளரும் சுயராஜ்யத்தில் இருத்தலாகாது. சைத்தானுடைய இந்தப் பானத்தை எங்கே கண்டாலும் நாம் ஒழித்துவிட வேண்டும்."

* * * *

"டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையின் சூரத் நிருபர் அப்பத்திரிகைக்கு அனுப்பிய செய்தி:—

"ஏப்ரல் மாத முடிவிற்குள் பர்தோலி தாலூகாவில் 11,045 கள்ளு மரங்களும், ஜலால்பூர் தாலூகாவில் 1186 மரங்களும், புல்ஸார் தாலூகாவில் 60 மரங்களும் வெட்டப்பட்டிருக்கின்றன. மால்வாத் துபலாக்களின் சாதிப் பஞ்சாயத்தார் கள்ளை யொழிக்க வேண்டுமென்று தீர்மானித்து, கட்டுப்பாட்டை மீறிக் குடிப்பவர்களுக்கு அபராதம் போடவும் தீர்மானித்திருக்கிறார்கள். சாதித் தலைவர்கள் குடிப்பதாகத் தெரிந்தால் அவர்களுக்கு அபராதம் விதிப்பதோடு, அவர்களுடைய இடது பக்கத்து மீசை எடுத்து விடப்படும். மஹிஸரியா நாவிதர்களின் சாதிக் கூட்டத்திலும் குடியை நிறுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். ஆண்கள் குடித்தால் ரூ. 10-4-0ம் பெண்கள் குடித்தால் ரூ. 25-4-0-ம் அபராதம் வசூலிக்கப்படும்."

* * * *

நெல்லூர் ஜில்லாவில் கள்ளுக்கடை மறியல் நடத்தியதின் பயனாக, ஊட்டுக்கூறு, எல்லப்பாளையம், கங்காபட்டணம், மைப்பாடு முதலிய

கிராமங்களில் ஜனங்கள் அடியோடு குடியை நிறுத்திவிட்டார்கள். இந்த விடங்களிலுள்ள கள்ளுக்கடைகள் காலியாகிவிட்டன. குண்டூர் ஜில்லாவிலும் பல விடங்களில் கள்ளுக்கடை மறியல் நடத்தியதில் நல்ல பலன் விளைந்திருக்கிறது. கள்ளுக்கட்டிய பனை மரங்களை வெட்டியதற்காகத் தொண்டர்கள் பலர் கடுமையான தண்டனை விதிக்கப்பெற்றிருக்கிறார்கள்.

* * * *

பம்பாயில் கள்ளுக்கடை மறியல் தொடங்குவதற்குப் பூர்வாங்கமாக தீவிர மதுவிலக்குப் பிரசாரம் நடந்து வருகிறது. இவ்வேலையைக் கலைஞ் சென்ற தாதாபாய் நௌரோஜியின் பேத்திகளின் தலைமையில் பெண் தொண்டர்கள் செய்து வருகிறார்கள். காந்தி ஆசிரமத்தில் வெளியிட்டிருக்கும் மதுவிலக்குப் படங்கள் மூன்று தொகுதி இவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீமதி பெரின்பாய் காப்டன் எழுதியிருக்கும் கடிதத்தில், இப்படங்கள் தங்கள் பிரசாரத்துக்கு மிகவும் உதவியாயிருக்குமென்று தெரிவித்திருக்கிறார்.

* * * *

சூரத் ஜில்லாவில் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியின் தலைமையில் பெண் தொண்டர்கள் தீவிரமான மதுவிலக்குப் பிரசாரம் செய்தார்கள். இதன் பயனாக கச்சோலி என்னும் கிராமத்திலுள்ள 3000 ஜனங்களும் குடிப்பதில்லையென்று விரதம் எடுத்துக் கொண்டனர். அவ்வூரிலுள்ள கள்ளு, சாராயக்கடைகள் இரண்டையும் மூடியாகிவிட்டது. பீம்ராட் என்னும் கிராமத்திலும் ஒரு கள்ளுக்கடை மூடப் பெற்றது.

* * *

டாக்கா, ஜெஸ்ஸூர், மகிஷ்டாபன் முதலிய இடங்களில் கள்ளு, சாராயக் கடைகளைத் தொண்டர்கள் மறியல் செய்தார்கள் இதனால் அவ்விடங்களில் மதுவியாபாரம் மிகவும் குறைந்து போயிற்று.

* * * *

பம்பாயில் சென்ற மாதத்தில் நடந்த தீவிர மதுவிலக்குப் பிரசாரத்தின் பயனாக மதுவியாபாரம் மிகவும் படுத்துப்போனதாய் மது வியாபாரிகள் முறையிடுகிறார்கள். சீமைச்சரக்கு தருவிக்கும் ஒரு வியாபாரி, சராசரியில் தமக்கு மாதம் 800 ரூபாய் ஒயின் விற்பது வழக்கமென்றும், ஏப்ரல் மீ 19௳ வரையில் 65 ரூபாய்தான் விற்றதென்றும் தெரிவித்தார்.

* * * *

மகாத்மா காந்தியை சர்க்கார் சிறைப்படுத்திய பின்னர் ஜலால்பூர் தாலூகாவில் பத்து கள்ளுக்கடைகளை 100 தொண்டர்கள் இரவு பகல் 24 மணி நேரமும் சாத்வீகமாக மறியல் செய்து வந்தார்கள். இதன் பயனாக ஏழு கள்ளுக்கடைகள் மூடப் பெற்றுவிட்டன.

* * * *

வேதாரண்யம் சத்தியாக்கிரஹப் படைத் தொண்டர்கள், ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி அவர்களின் தலைமையில் பக்கத்து கிராமங்களுக்குச்சென்று தீவிர மதுவிலக்குப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

கடற்கரைக் கிளிஞ்சல்

நமது ஆசிரியர் சிறை புகுந்தபோது, "விமோசனம்" பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்பதாகக் கட்டளையிட்டுச் சென்றிருக்கிறார். எந்த வேலை நின்றாலும் மதுவிலக்கு வேலை நிற்கக்கூடாதென்பது ஆச்சாரியாரின் விருப்பம். ஆதலின் வேறு தடை எதுவும் குறுக்கிடாத வரையில் பத்திரிகை நடத்தப்பட்டு வரும். அன்பர்கள் அனைவரும் இம்முயற்சியில் நம்முடன் ஒத்துழைத்து வருவார்களென்று நம்புகிறோம்.

*　　　*　　　*　　　*

காந்தி ஆசிரமம் மானேஜரும், தமிழ்நாட்டு மதுவிலக்குக் கமிட்டியின் காரியதரிசிகளில் ஒருவருமான ஸ்ரீமான் க. சந்தானம், ஸ்ரீமான் ஆச்சாரியாருக்குப் பின்னர் வேதாரண்யம் சத்தியாக்கிரஹப் படைக்குத் தலைமை வகித்து, ஏழரை மாதம் சிறைவாச தண்டனையடைந்தார். எனவே, [க.ச.] கட்டுரைகளை இனிக் கொஞ்சகாலம் நமது பத்திரிகையில் காண முடியாது.

*　　　*　　　*　　　*

கோலார் தங்கவயலில் சென்ற மாதத்தில் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருந்தது. வேலை நிறுத்தம் நீடித்திருந்த வரையில் அங்குள்ள சுமார் எழெட்டு கள்ளு சாராயக் கடைகளையும் மூடிவைத்திருந்தார்களாம். வேலை நிறுத்தம் முடிந்ததோ இல்லையோ, உடனே மறுபடியும் கடைகளைத் திறந்து விட்டார்கள். இதிலிருந்து விளங்குவதென்ன? குழப்பங்களுக்கும் கலவரங்களுக்கும் கள்ளு சாராயக் கடைகள் காரணமானவை என்பதை சர்க்காரே ஒப்புக்கொள்கிறார்களன்றோ? இத்தகைய கடைகளை மற்றக் காலங்களில் மட்டும் ஏன் திறந்து வைக்கவேண்டும்? ஏழைத் தொழிலாளிகள் பாடுபட்டுத் தேடும் கூலிப்பணத்தை வைத்துக்கொண்டு அமைதியாய்க் காலங்கழிக்கக் கூடாதென்ற எண்ணமா?

*　　　*　　　*　　　*

பூனாநகரின் தேசியத் தலைவரான ஸ்ரீமான் போபத்கார் என்பவர் உப்புச் சட்டத்தை மீறியதற்காக ஒன்பது மாதம் சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டார். விசாரணையின்போது இவர் தமது வாக்கு மூலத்தில் கூறியதாவது:—

"நல்ல சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது எப்படி ஒரு பிரஜையின் கடமையாகுமோ, அதுபோலவே அநியாயச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய மறுப்பதும் அவனுடைய கடமையாகும். அரசாங்கத்தின் உப்புச் சட்டமும் கலால் சட்டமும் நல்ல சட்டத்தின் அடிப்படையான தத்துவங்களுக்கே முரண்பட்டவை. ஆகலின் நான் சிறையிலிருந்து வெளிவந்த பிறகும், மதுவியாபாரம், உப்புச் சட்டம், ஆயுதச்சட்டம் இவைகளைத் தொலைப்பதற்குச் சட்ட மறுப்புப் போர் நடத்தியே தீருவேன்."

சர்வதேசீய மதுவிலக்கு சபையின் தலைமைக் காரியாலயம் ஐரோப்பாவிலுள்ள லாஸேன் நகரில் இருக்கிறது. இக் காரியாலயத்தார் உலகமெங்கும் நடைபெறும் மதுவிலக்கு முயற்சிகளைப்பற்றி அடிக்கடி அறிக்கை வெளியிட்டு வருகிறார்கள். சென்ற ஏப்ரல் மாதத்தில் வெளியான மேற்படி சபையின் அறிக்கையில் "இந்தியா" என்ற தலைப்பில் காணும் செய்தியாவது :—

"மகாத்மா காந்தி நடத்திவரும் பெரிய போராட்டத்தை உலகமெல்லாம் அடங்காத ஆவலுடன் கவனித்து வருகிறது. அடக்கு முறையின் பயங்கரங்களும், அதன் பயனான இரத்தக்கிளறியும் ஏற்படாமலிருக்க வேண்டுமேயென்று எல்லாரும் பிரார்த்தித்து வருகிறார்கள். மகாத்மா பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது சாட்டியிருக்கும் குற்றங்களிலே, மது வியாபாரம் நடத்துவதை முக்கியமாகச் சொல்லியிருப்பது குறிப்பிடத் தக்கது. இராஜப் பிரதிநிதிக்கு அவர் எழுதிய பிரசித்திபெற்ற கடிதத்தில், மதுவிற்பனையை அரசாங்க வருமானத்துறைகளில் முக்கியமானதொன்றாய்ச் செய்ததின் பொருட்டு பிரிட்டிஷ் நிர்வாகத்தை நிந்தித்திருக்கிறார்."

* * * *

உத்தம பாளையத்துக்கடுத்த அனுமந்தன் பட்டி கிராமத்திலும், சிவகங்கை தாலூகாவைச் சேர்ந்த தமராக்கி, ஆண்டிச்சி ஊருணி கிராமங்களிலும் உள்ள ஐக்கிய நாணய சங்கங்களின் மகா சபைக் கூட்டத்தில், அந்தந்த கிராமங்களிலுள்ள கள்ளு, சாராயக் கடைகளை மூடிவிட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஜனங்கள் சிக்கனமாக வாழ்ந்து பணம் மீதி செய்யுமாறு பயிற்சியளிப்பதே ஐக்கிய நாணய சங்கங்களின் நோக்கமாகும். கள்ளு சாராயக் கடைகள் இந்த நோக்கம் நிறைவேறுதற்குப் பெரிய இடையூறாக ஆகுமென்று சொல்ல வேண்டியதில்லை. ஆதலின் மற்றும் நாட்டிலுள்ள ஐக்கிய நாணய சங்கங்கள் இதுபோலவே தீர்மானம் செய்வதுடன், பிடிவாதமாய் நின்று, கள்ளு சாராயக் கடைகள் மூடப் பெறும் வரையில் பலமான கிளர்ச்சி செய்தல் அவசியம்.

* * * *

கராச்சி நகரசபை அங்கத்தினரான ஸ்ரீமான் பாவா ஜயராம்தாஸ் என்பவர் பல கள்ளுக்கடைகளின் குத்தகைதாரர். மகாத்மா காந்தி சிறைப்பட்டதின் காரணமாக, அவர் தமது கள்ளுக்கடை லைசென்ஸுகளை யெல்லாம் அரசாங்கத்துக்குத் திருப்பி யனுப்பிவிட்டார். அவர் அரசாங்கத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் தாம் நஷ்டமடைவதைக் குறித்துச் சிறிதும் வருத்தப்படவில்லை யென்றும், மகாத்மாவின் இயக்கத்திற்காக எவ்வளவு கஷ்டமநுபவிக்கவும் தயாராயிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறாராம்.

* * * *

தென்னாப்பிரிக்காவில் வெளியாகும் மதுவிலக்குப் பத்திரிகை குடியினால் கெட்ட ஒருவரின் பின்வரும் வேண்டுகோளை வெளியிட்டிருக்கிறது :—

"சாராயத்தினால் என் உடம்பெல்லாம், எலும்பெல்லாம் விஷமாகியிருக்கின்றது. இதை நான் வேண்டுமென்று செய்து கொள்ளவில்லை.

என் இஷ்டத்துக்கு விரோதமாய் இந்த கதி எனக்கு நேர்ந்தது. என்னைப்போன்ற இன்னும் எத்தனையோ பேரை நான் அறிவேன். பாழும் சாராயத்தை விற்கும் கடைகள் இருப்பதினால் தான் நாங்கள் எல்லாம் கெட்டோம். கடைகளை ஒழித்தால் நாங்கள் பிழைப்போம். மறுபடியும் மனிதர்களாவோம். பலமுறை குடியின் காரணமாகவே நான் சிறையில் இருந்திருக்கிறேன்; அப்போது குடிக்காமலிருத்தல் எனக்கு சாத்தியமா யிருந்தது. கடையைக் கண்டால் தான் ஆவலை அடக்கமுடியவில்லை."

* * * *

அறிவை அழிக்கும், செயலழிக்கும்,
அழியா மானந்தனை யழிக்கும்,
செறியும் அறிஞர் மதியாத
செருக்கை விளைக்கும், ஈன்றாளும்
முறியும் வெறுப்பு மிகவிளைக்கும்,
முனிவுவிளைக்கும், பகையஞ்சாக்
குறிகள் விளைக்கும், நகைவிளைக்கும்
கொள்ளேல் கள்ளுண்டலை மைந்தா!

—விநாயக புராணம்

கள்ளானது அறிவையும், செயல் திறமையையும் அழிக்கும்; மானத்தைக் கெடுக்கும்; அறிஞரால் இகழப்படும் அகங்காரத்தை உண்டாக்கும்; பெற்ற தாயும் மனம் நொந்து வெறுக்கும்படி செய்யும்; கோபம் விளைவிக்கும்; கள்ளுக் குடிப்பவனிடம் அவனுடைய பகைவர்களுக்கு அச்சமிராது; காண்போர் சிரிப்பார்கள். ஆகையால் மைந்தனே! நீ கள்ளுண்ணலைக் கைக்கொள்ள வேண்டாம்.

* * * *

வஞ்சமும், களவும் பொய்யும்,
மயக்கமும், மரபில் கொட்பும்,
தஞ்சமென்றாரை நீங்குந்
தன்மையும், களிப்பும் தாக்கும்
கஞ்சமெல்லனைங்கும் தீரும்
கள்ளினால்; அருந்தினாரை
நஞ்சமும் கொல்வதல்லால்
நரகினை நல்காதன்றே.

—கம்பராமாயணம்.

கள்ளானது வஞ்சனை, திருட்டு, பொய், அறிவுமயக்கம், தலைகிறுகிறுப்பு, அடைக்கலம் புகுந்தோரைக் கைவிடும் குணம், மதோன்மத்தம் ஆகியவற்றிற்குக் காரணமாகும். கள்ளுண்பவனை விட்டு லக்ஷ்மிதேவி நீங்கி விடுவாள். கள் விஷத்தினும் கொடியது. ஏனெனில் விஷம் தன்னை அருந்தினவர்களைக் கொல்வதோடு நிற்கிறது. கள்ளோ தன்னை அருந்தினவரைக் கொல்லுவதோடு, அவர்களுக்கு மறுமையில் நரகத்தையும் அளிக்கின்றது.

" மதுவிலக்குப் பிரசுரங்கள்

குடிகெடுக்கும் கள்

விலை அணா 1.

[தபால் செலவு அரை அணா.]

மதுவிலக்கு ஏன்?

பார்த்தாயா தம்பி!

கள்ளுக்கடைக்குப் போகிறாயா?

குடிப்பதுகள்ளல்ல!

மதுவிலக்குப் பாட்டுகள்.

[சித்திரப் படங்கள் உள்ள மேற்படி துண்டுப் பிரசுரங்கள் ஓரளவிற்குட்பட்டு மதுவிலக்குத் தொண்டர்களுக்கு இலவசமாய் அனுப்பப்பெறும். தபால் செலவுக்காக ஆயிரத்துக்கு ஒரு ரூபாய் வீதம் முன்பணம் அனுப்பவேண்டும்.]

விலாசம் :—

காந்தி ஆசிரமம்,

திருச்செங்கோடு.